Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 23 இதழ் - 9 செப்டம்பர் 2010

தனிப் பிரதி ரூ. 8/-



கிறிஸ்துவின் சபை

காங்கயம் 638 701. தமிழ்நாடு. இந்தியா.

04257 - 230030, 98427 - 30382, 99655 - 30385

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்!! பங்கு பெறுங்கள் !!!

## பதிமூன்றாம் வேதாகம கருத்தரங்கம்

நாள் : **அக்டோபர் 1,2 - 2010 (வெள்ளி, சனி)**

நேரம்: **வெள்ளி காலை 9:00 - மாலை 4:30 மணி**

**சனி காலை 9:00 - மதியம் 12:30 மணி**

இடம்: **கிறிஸ்துவின் சபை வளாகம்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

கருப்பொருள் : **"கிறிஸ்துவின் சுவிசேஷம்"**

- **வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.**
- **தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனி இடவசதி உண்டு.**

**தொடர்பு முகவரி**

**கிறிஸ்துவின் சபை**

195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

PH.:04257 - 230030
Cell:98427 - 30382
99655 - 30385


## ஆசானின் அறிவுரையில்...


1. ஆசிரியர் உரை ........ 1
2. நாங்கள் ஏன் வேதாகமத்தை விசுவாசிக்கிறோம்? ........ 11
3. பெண்கள் பகுதி ........ 16
4. வாலிபர் பகுதி ........ 19
5. சிறுவர் பகுதி ........ 22
6. பாவமில்லாத வாழ்வு சாத்தியமா? ........ 24
7. ஆவிக்குரிய வாழ்விற்கான அளவுகோலை ஏற்படுத்துகிறது யார்? 27
8. நான் ஏன் தேவனை விசுவாசிக்கிறேன்? ........ 29
9. இயேசு சோதிக்கப்பட்டதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன் 31


# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 23 SEPTEMBER - 2010 Issue - 10

## புதிய நூல்கள் வெளியீடு

கர்த்தருடைய பெரிதான கிருபையால், அநேக வாசகர்கள் விரும்பிக் கேட்ட, **"திருமறை ஆசான்"** மாத இதழில் வெளியான ஆசிரியர் உரைகளின் ஒரு பகுதி,

**" ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள் "**

என்ற தலைப்பில், எதிர்வரும்

அக்டோபர் 1,2-2010 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள

**பதிமூன்றாம் வேதாகமக் கருத்தரங்கில்**

வெளியிடப்பட இருக்கிறது.

அத்துடன், **சகோ. J.C. சோட்** அவர்கள் எழுதிய

**ஏன் நாங்கள் விசுவாசிக்கிறோம்**
**எதை நாங்கள் விசுவாசிக்கிறோம்** } பாகம் - I & II

ஆகிய நூல்களும் வெளியிடப்பட இருக்கின்றன.

- ஆசிரியர்.

## கருத்தரங்கிற்கு வாருங்கள் !!

எதிர்வரும் அக்டோபர் திங்கள் 1,2–2010 ஆகிய தேதிகளில் காங்கயத்தில் நடைபெறும் " **பதிமூன்றாம் வேதாகம கருத்தரங்கிற்கு**" வாசகர்களாகிய நீங்கள் யாவரும் திரளாக வருகை தந்து சிறப்பிக்குமாறு உங்கள் ஒவ்வொருவரையும் ஜெபத்தோடு அழைக்கிறோம்.

– ஆசிரியர்.

ஆசிரியர் உரை

# இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல

ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் உண்டாக்கின நாள் முதற்கொண்டு நாம் வாழும் இப்பூமி பற்பல நிகழ்வுகளை அவ்வப்போது கண்டு வந்துள்ளது. அந்நிகழ்வுகள் சரித்திர ரீதியாக நடந்திருக்கலாம், பூகோள ரீதியாக ஏற்பட்டிருக்கலாம், அரசியல் ரீதியாக முடிந்திருக்கலாம். இன்னும் அவை ஆன்மீக ரீதியாகக் கூட உண்டாயிருக்கலாம். ஆனால், அப்படி நடந்த எல்லா நிகழ்வுகளுக்கும் ஜனங்களும், சரித்திரமும் சமமான முக்கியத்துவம் கொடுத்துவிடுவதில்லை. ஏன் கொடுக்கவில்லை என்பதற்கான காரணத்தை நாம் பூத கண்ணாடி வைத்துத் தேடிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமுமில்லை. ஏனெனில், ஒரு நிகழ்வு முக்கியமானதா அல்லது முக்கியமற்றதா, ஜனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதா, சரித்திரத்தால் அங்கீகரிக்கப்பட்டதா அல்லது தள்ளப்பட்டதா என்பது பல அம்சங்களை உள்ளடக்கியதாக உள்ளது. ஆம், ஒரு நிகழ்வு எந்தக் காலகட்டத்தில் நடந்தது. அந்நிகழ்வில் சம்பந்தப்பட்டவர்கள் யார், யார், அந்நிகழ்வால் உண்டான பாதிப்பு எப்படிப்பட்டது, அது ஏற்படுத்திய தாக்கம் எந்தளவு உள்ளது, அந்நிகழ்வால் விளைந்த நன்மை, தீமைகளின் அளவு என்ன என்பன போன்ற பால காரியங்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டு, அதன்பிறகே அதன் முக்கியத்துவம் தீர்மானிக்கப்படுகிறது.

இந்த அடிப்படையில் தான் ஒவ்வொரு நிகழ்வும் பார்க்கப் பட்டு அதற்கான முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. ஆனால், சில நேரங்களில் சில நிகழ்வுகள் வேண்டுமென்றே குறைத்து மதிப் பிடப்பட்டு, அதன் முக்கியத்துவம் கண்டும் காணாமலும் விடப் பட்டுள்ளது. இதற்கான மிகச் சிறந்த உதாரணம், முதல் நூற்றாண் டில் நம்முடைய இரட்சகராகிய இயேசு ஆண்டவர் சம்பந்தப்பட்ட காரியங்களே. அவர் வாழ்ந்த முதலாம் நூற்றாண்டின் முற்பகுதி யிலும், அவர் உயிர்த்தெழுந்த பின்னான நாட்களிலும், அவர் பற்றிய காரியங்கள் அன்றைக்கிருந்த ஆட்சியாளர்களாலும், மதத் தலைவர்களாலும் திட்டமிட்டு அமுக்க முயற்சிக்கப்பட்டது. அதிலே அவர்கள் வெற்றி பெற முடியவில்லை என்பது வேறு விஷயம். ஆனால், இதுதான் நடந்த உண்மை. இப்படி மறைக்க முயற்சிக்கப்பட்ட, பகிரங்கமான உண்மை பற்றிதான் மாமனி தனாகிய அப்போஸ் தலன் பவுல், ஒரு சமயம் அகிரிப்பா ராஜாவினிடத்தில், மூடி மறைப்பதற்கு இது ஒன்றும் "ஒரு மூலை யிலே நடந்த காரியமல்ல" என்று சத்தமாகக் கூறினார்.

சரி, பவுலடியார் இதை எந்தச் சூழ்நிலையில் சொன்னார் என்பதை தெரிந்து கொள்ள, நமது வழக்கத்தின்படியாக இதன் பின்னணியைக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

மூன்று நற்செய்திப் பயணங்களை மேற்கொண்ட பவுல், தன்து மூன்றாம் பயணத்தை முடித்துக் கொண்டு எருசலேமுக்கு வந்து சேர்ந்தார் (அப். 21:18). அங்கு அப்போஸ்தலர்களின் ஆலோசனையின் பேரில் சில யூதமார்க்க சம்பிரதாயங்களை முடித்த நிலையில் (21:26) ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர் களால் பிரச்சினை ஏற்பட்டு காரியம் கைமீறிப்போனது (அப். 21:27-31). பிறகு சேனாதிபதியின் தலையீட்டின் பேரில் காப்பாற் றப்பட்டு, கோட்டைக்குள் எப்படியோ கொண்டு போகப்பட்டான் (32-34). அதன் பிறகு, அவன் ஆலோசனைச் சங்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு உத்தரவு சொல்லுகையில் கலகம் உண்டானதினால் மீண்டும் கோட்டைக்குள் கொண்டு போகும்படி சேனாதிபதி லீசியா கட்டளையிட்டான் (23:10) ஆனால், அவன் மீது குற்றம் சாட்டினவர்களோ, தாங்கள் பவுலைக் கொலை செய் யுமளவும், புசிப்பதுமில்லை, குடிப்பதுமில்லையென்று சபதம் பண்ணிக்கொண்டு சரியான சமயத்துக்குக் காத்திருந்தார்கள் (அப். 23:12,13) இக்கொலைச் சதிக்கு யூத மத உயர் அமைப்பான ஆலோசனைச் சங்கத்தாரும் உடந்தையாயிருந்திருக்கிறார்கள் (23:15) என்பது கேட்பதற்கே எப்படியோ உள்ளது!

ஆனால், இந்த சதியாலோசனை அரசல் புரசலாக பவுலின் சகோதரியின் மகனுக்குத் தெரியவந்தது. பிறகு பவுல் வழியாக சேனாதிபதியாகிய லீசியாவின் காதுகளுக்குப் போய்ச் சேர்ந்த போது, அவன் சாதுரியமாகச் செயல்பட்டு தேசாதிபதி பேலிக்ஸி டம் மேற்கொண்டு விசாரிக்கப்படும்படி அனுப்பி வைத்தான்.

ஆனால், இந்த உல்லாசப் பிரியனாகிய பேலிக்ஸ், எது நியாயம், எது நீதி என்று தெரிந்து கொள்ள முயற்சிக்காமல், பணத்தாசை பிடித்தவனாக இருந்து, பணத்தைப் பெற்றுக்கொண்டு நீதியின் குரல் வளையை நெறிக்க ஆயத்தமாக இருந்தான். இங்கே வசனத்தைக் கவனியுங்கள். மேலும், அவன் பவுலை விடுதலை பண்ணும்படி தனக்கு அவன் பணம் கொடுப்பானென்று நம்பிக்கையுள்ளவனாயிருந்தான்; அதினிமித்தம் அவன் அநேகந்தரம் அவனை அழைத்து அவனுடனே பேசினான் (24:26) சத்தியவானாகிய பவுல், தன் நம்பிக்கைக்காக எப்படிப்பட்ட இழி பிறவிகளுக்கு முன்பாகவெல்லாம் போய் நிற்க வேண்டியிருந்துள்ளது பாருங்கள்!.

இந்த பேலிக்ஸை அடுத்து, ஒரு தேசாதிபதி வந்தான், அவன் பெயர் பெஸ்து. இவனாகிலும் நல்லவனா என்று பார்த்தால் அங்கும் பவுலுக்கு ஏமாற்றமே. ஆம், இந்த ஆளுநர், பவுலின் மீது சாட்டப்படுகின்ற அநேகங் கொடிய குற்றச்சாட்டுகளின் பின்னணியையும், சாட்டுகிற மனிதர்களின் உள்நோக்கத்தையும் புரிந்து கொள்ளாமல், ***யூதர்களுக்கு தயவு பண்ண மனதாய், விசாரிக்கப்பட எருசலேமுக்கு வர உனக்கு சம்மதியா என்று கேட்டான்.*** (25:7-9) விசாரணை என்ற பெயரில் பின்னப்பட்டிருக்கும் சதி வலையைக் கனகச்சிதமாகப் புரிந்து கொண்ட பவுல் மிகுந்த ஞானமாக "நான் இராயனுக்கு அபயமிடுகிறேன்" என்றான். நொண்டிக் குதிரைக்கு சறுக்கினதே சாக்கு என்பது போல "நீ இராயருக்கு அபயமிட்டாயே; இராயரிடத்திற்கே போகக்கடவாய்" என்று உத்தரவு சொன்னான் இந்த பெஸ்து. தன் பொறுப்பை உணர்ந்து, கடமையாற்றத் தெரியாத கையாலாகாத மனிதனெல்லாம் அன்றைக்கு நாற்காலியில் அமர்ந்திருந்துள்ளனர். இவர்களுக்கு முன்பாகவும் பவுல் நிற்க வேண்டியதொரு நிலை. எவ்வளவு கடுமையான சூழ்நிலைகளையெல்லாம் பவுல் சத்தியத்தினிமித்தமும், ஊழியத்தினிமித்தமும் கடந்து வந்துள்ளார் பாருங்கள்.

பிறகு கொஞ்ச நாட்கள் கழித்து, அகிரிப்பா ராஜாவும் பெர்னீக்கேயாளும் விருந்தாளிகளாக பெஸ்துவைக் கண்டு கொள்ளும்படி வந்தனர். பவுலைப் பற்றி பெஸ்து மூலமாய் கேள்விப்பட்ட அகிரிப்பா, அந்த மனுஷன் சொல்லுகிறதை நானும் கேட்க மனதாயிருக்கிறேன் என்றான் (25:22) "தர்ம அடி" என்பது போல, பவுல் "தர்ம விசாரணை" செய்யப்படுகிறான். இருப்பினும் அகிரிப்பாவிற்கு முன்பாக விசாரணைக் கைதியாக நிற்பதில் பவுலுக்குக் கொஞ்சம் திருப்தி. ஏனெனில், "யூதருடைய சகல முறைமைகளையும், தர்க்கங்களையும் அவன் அறிந்திருந்தான்" (26:3) அப்படி அறிந்திருந்தபடியால் இவனிடத்திலாகிலும் நியாயம் கிடைக்காதா என்ற நப்பாசை உள்ளூர பவுலுக்கும் இருந்தி

ருக்கும். அப்படித்தானே! ஆகவே தான், விலாவாரியாக உத்தரவு கொடுக்கிறான். தன் சிறுவயது வாழ்க்கை, இயேசுவால் சந்திக் கப்பட்ட விதம், அந்த அழைப்புக்கு அடிபணிந்த அழகு, பிறகு கிறிஸ்துவுக்காக இவன் செய்த ஊழியம் என்று காரியங்களை வரிசையாய் அடுக்கி வாதத்தை திறமையாக எடுத்து வைத்தான். அத்தோடு, யூதர்களிடத்திலும், கூறுகிறார். ...“அவர்கள் தேவனி டத்திற்கும் மனந்திரும்பிக் குணப்படவும். மனந்திரும்புதலுக் கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன்” என்றான் (26:20) எவ்வளவு பக்தி வைராக்கியத்தோடு பவுல் பேசியிருக்கிறாரென்று பாருங்கள்.

ஆனால், அகிரிப்பா ராஜாவோடு அமர்ந்து பவுலின் வாதத் தைக் கேட்டுக் கொண்டிருந்த கையாலாகாத மனிதனாகிய தேசாதி பதி பெஸ்துவுக்கோ “அது பிதற்றலாகவும், பைத்தியமாகவும்” தெரிந்திருக்கிறது. (26,24) ஆம், அவன் “பவுலே நீ பிதற்று கிறாய், அதிக கல்வி உனக்குப் பைத்தியமுண்டாக்குகிறது என் றான்”. தன்னை ஒருவன் பைத்தியக்காரனென்று சொன்ன நிலையி லும், நிதானம் இழக்காத பவுல், இல்லையில்லை, நான் சத்திய மும் சொஸ்த புத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன் என்று பதிலளித்து விட்டு (26:25) இதற்கு மேல் இவனிடம் பேசிப் பய னில்லை என்பதைத் தெரிந்து கொண்டு, அகரிப்பா ராஜாவின் பக்கமாய்த் திரும்பி இந்தச் சங்கதிகளை ராஜா அறிந்திருக்கிறார். ஆகையால், தைரியமாக அவருக்கு முன்பாகப் பேசுகிறேன். இவைகளில் ஒன்றும் அவருக்கு மறைவானதல்லவென்று எண்ணு கிறேன்; இது ஒரு மூலையில் நடந்த காரியமல்ல என்றான் (26:26).

இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்லவென்று பவுல் சொன்னபோது, எவைகளை மனதில் கொண்டவராகப் பேசியி ருப்பார்? தான் பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டு, ஆலோச னை சங்கத்துக்கு முன்பாகக் கொண்டு போகப்பட்டது பற்றியும், விசாரணை என்ற பெயரில் வித்தியாசமான மனிதர்கள் முன்பாக நிறுத்தப்பட்டதையுமா பேசியிருப்பார்? ஒருவேளை இவை களும் ஒரு மூலையிலே நடந்த காரியமல்லவென்றாலும் இவை களைச் சொல்லிப் பெருமையடித்துக் கொள்ளும்படியாகவா பவுல் முயன்றிருப்பார்? கண்டிப்பாக அப்படியிருக்க நியாயமில் லை. ஏனெனில், கிறிஸ்துவுக்காக தனக்கு லாபமாயிருந்தவை களையெல்லாம் நஷ்டமென்று எண்ணியவராயிற்றே இந்தப் பவுல் (பிலி. 3:7). அப்படியானால், இது மூலையிலே நடந்த காரியமல்லவென்று எதைப் பற்றித்தான் சொல்லியிருப்பார்? சொல்லுங்கள். கண்டிப்பாக, பவுலின் நம்பிக்கை நாயகராயிருந்த இயேசு பற்றிய காரியங்களைத்தான் இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்லவென்று சொல்லியிருப்பாரோயொழிய வேறொன் றைப் பற்றியுமிருக்காது.

இயேசு பற்றிய காரியங்கள் எதுவும் ஒரு மூலையிலே நடந்தவை அல்ல. ஆம், அவருடைய பிறப்பு பற்றிய அறிவிப்பு, அவருடைய வாழ்க்கை, அவருடைய ஊழியம், அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், அவர் வாக்களித்துக் கட்டின சபையின் ஆரம்பம், அதன் வளர்ச்சி இப்படி எதுவுமே மூலை யிலே நடந்ததல்ல. எல்லாமே வெட்ட வெளிச்சமானவையே. ஆயினும், இவை எல்லாவற்றையும் நாம் இங்கே பார்க்க முடியா தாகையால், ஒரு மூன்றை மாத்திரம் நமக்காக இங்கே எடுத்துக் கொண்டு சில பாடங்களைக் கற்றுக்கொள்ளுவோம்.

**I கிறிஸ்துவின் முதலாம் வருகை ஒரு மூலையிலே நடந்த ஒன்று அல்ல.**

“இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல” என்ற தலைப் பின் கீழாக நமக்குக் கிடைக்கும் முதலாவது பாடம், இயேசுவின் முதலாம் வருகை பற்றிய காரியங்கள் எதுவுமே ஒரு மூலையிலே நடந்தவை அல்ல என்பது.

அப்போஸ்தலன் பவுல், அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்லவென்று சொல்லும் போது, கிறிஸ்துவின் முதலாம் வருகையை மனதில் கொண்டவ ராகவும் பேசியிருக்க வேண்டும். எப்படியெனில், அவர் எந்த நம்பிக்கைக்காக குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டாரோ அந்த நம்பிக்கைக்கு அடித்தளமே கிறிஸ்துவின் முதலாம் வருகையும், அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களும் தான்.

அந்த முதலாம் வருகையின் அபாரம் பற்றி, வேதாகமம் பல ஆச்சரியமான தகவல்களை நமக்கு அள்ளிக் கொடுக்கிறது. அவருடைய பிறப்பு முதல், உயிர்த்தெழுதல் வரைக்குமான சகல காரியங்களும் தீர்க்கதரிசிகளால் பல நூறு ஆண்டுகளுக்கு முன் பாகவே முன்னுரைக்கப்பட்டு, துல்லியமாகப் பேசப்பட்டுள்ளது. ஆம், அவர் கன்னியின் வயிற்றிலே பிறப்பார், கள்வர்களுடன் மரிப்பார், ஐசுவரியவானுடைய கல்லறையில் அடக்கம் பண்ணப் படுவார் என்று ஏசாயாவும் (7:17,53:9-12), யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார் என்று மீகாவும் (5:2), எகிப்துக்குப் போவார் என்று ஓசியாவும் (11:1) முப்பது வெள்ளிக்காசுக்குக் காட்டிக் கொடுக்கப்படுவார் என்று சகரியாவும் (11:12-13) கூறியுள்ளனர். இவைகள் போதாது என்பது போல, சங்கீதங் களிலே, அவர் காட்டிக் கொடுக்கப் படுவது (41:9), அவருடைய கைகளிலும், கால்களிலும் ஆணிகள் உருவப்படுவது (22:16) காடியைக் குடிக்கும்படி கொடுப்பது (69:21) வஸ்திரங்களைச் சீட்டுப் போடுவது (22:10) எலும்புகள் முறிக்கப்படாது என்பது (34:20) மற்றும் அவர் உயிரோடே எழுப்பப்படுவார் என்பது (16:10) போன்ற பல காரியங்கள் அழகாக வெளிப்படுத்தப்பட் டுள்ளது.

இந்தத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்ட காரியங்களனைத்தும் பழைய ஏற்பாட்டுப் பக்தர்களால் முறையாக வாசிக்கப்பட்டு, ஓய்வு நாள் தோறும் போதிக்கப்பட்டவை. அவை, எந்தளவு விசுவாசிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதென்பதில் கொஞ்சம் மாறுபட்ட கருத்து இருந்தாலும், இவைகள் வெளிப்படுத்தப்படாதவைகளோ, இரகசியமாக வைக்கப்பட்டவைகளோ அல்லது ஒரு மூலையிலே போட்டு அமுக்கப்பட்டவைகளோ அல்ல என்பது நிச்சயம். தீர்க்கதரிசிகளால் முன் அறிவிக்கப்பட்ட அனைத்தும் புதிய ஏற்பாட்டிலே அப்படியே அட்சரம் பிசகாமல் நிறைவேறியுமுள்ளது. அப்படியானால், கிறிஸ்துவின் முதலாம் வருகை ஒரு மூலையிலே நடந்ததாக எப்படியிருக்க முடியும்? நிச்சயமாக அது ஒரு மூலையிலே நடந்த ஒன்று அல்ல.

அன்பானவர்களே, இயேசு ஆண்டவரின் முதலாம் வருகை பற்றிய காரியங்களை பவுல் *இந்தளவு அறிந்திருந்தபடியால் தான்* மிகுந்த தைரியமாக, அகிரிப்பா ராஜாவே, *இது ஒன்றும் மூலையிலே நடந்த காரியமல்ல* என்று சொல்ல முடிந்தது. ஆனால், இதை வாசிக்கின்ற நாம் ஒவ்வொருவரும் அவருடைய முதலாம் வருகை பற்றிய காரியங்களில் இவ்வளவு ஆழமான அறிவு கொண்டவர்களாக உள்ளோமா? தயவு செய்து எண்ணிப் பார்ப்போம். இப்படி ஆழ்ந்த அறிவு வேத வசனங்களில் இருந்தபடியால் தான், ராஜாக்களுக்கு முன்பாகவும் பயமில்லாமல் சத்தியத்தைச் சத்தமாகச் சொல்ல முடிந்தது. சத்தியத்திற்காக வாழவும் முடிந்தது. நாமும், சத்தியத்திற்காக வாழவேண்டுமானால், அநேகருக்கு சத்திய வசனத்தைப் பயமில்லாமல் தைரியமாக எடுத்துச் சொல்ல வேண்டுமானால், வேத வசனங்களில் தேறினவர்களாக இருப்பது அவசியம். முயற்சிப்போமா?

## II கிறிஸ்துவின் ஊழியம் ஒரு மூலையிலே நடந்த ஒன்று அல்ல

"இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல" என்ற தலைப்பின் கீழாக நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், அவருடைய ஊழிய காரியங்கள் எதுவும் ஒரு மூலையிலே நடந்தவை அல்ல என்பது.

இயேசு எல்லா நீதியையும் நிறைவேற்றும்படி ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறிய பிறகு, பிசாசினாலே சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்திரத்திற்குக் கொண்டு போகப்பட்டார் (மத். 4:1) அங்கு அவர் வேத வசனங்களைக் கொண்டு பிசாசானவனை புறமுதுகு காட்டச் செய்ததற்குப் பிறகு, *மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது* என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். *அப்பொழுது தம்மண்டை வந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஆத்தும குணத்திற்கான பிரசங்கத்தோடு நிறுத்தாமல் சரீர சுகத்தையும் சேர்த்து வழங்கினார்* (மத். 4:23)

மருத்துவ விஞ்ஞானம் விண்ணை முட்டியிருக்கும் இந்த நாட்களிலே கூட, அற்புத சுகம் எனறு பொய்யாக விளம்பரம் செய்தால் கூட கூட்டம் வாயைத் திறந்து கொண்டு அலைமோதுகிறதை நாம் பார்க்கிறோம். அப்படியானால், அந்த நாட்களில் அவரால் நடப்பிக்கப்பட்ட அற்புதங்களுக்கு எவ்வளவு பவிசும், மவுசும் இருந்திருக்குமென்று எண்ணிப் பாருங்கள்! இதுபற்றி மத்தேயு ஆசிரியர், அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும், வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், சந்திரரோகிகளையும்; திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர்களைச் சொஸ்தமாக்கினார். கலிலேயாவிலும் தெக்கப் போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர் தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து அவருக்குப் பின்சென்றார்கள் (மத். 4:24,25) என்று எழுதிக் கொடுத்துள்ளார். ஆக, ***இவருடைய கீர்த்தி பெலஸ்தினா தேசமெங்கும் கொடி கட்டிப் பறந்திருக்கிறது.*** இப்படித் திக்கெட்டும் போர் முரசு கொட்டிய ஊழியம் பற்றி, இது ஒரு மூலையிலே நடந்த ஒன்று என யாராவது சொல்ல முடியுமா?.

இன்னும், அவர் தன்னுடைய ஊழியத்தின் நாட்களில் ***மரித்தவர்களையும் உயிரோடே எழுப்பினார்.*** ஆம், கண்ணீரும் கம்பலையுமாகத் தன் முன் வந்து நின்ற நாயீன் ஊர் விதவையின் மகனையும் (லூக். 7:14), தலைவன் ஒருவனுடைய மகளையும் (மத். 9:18,23), மரித்து நான்கு நாளாகி நாற்றமெடுத்த நிலையிலிருந்த பெத்தானியா ஊரானாகிய லாசருவையும் உயிரோடே எழுப்பினார் (யோவா. 11:43). மரித்தவர்களை உயிரோடே எழுப்பின செய்தியை யாராவது மூடி போட்டு மறைக்க முடியுமா? காட்டுத் தீ போலல்லவா பரவியிருக்கும்.

இதற்கு மேலாக, அவருடைய ஊழியமும், வாழ்க்கையும் ஒரு மூலையிலே நடந்த காரியம் அல்ல என்பதற்கு, அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலும் ஒரு பலமான சான்று. ஆம், இயேசு சிலுவையிலறையப்பட்டு பிதாவின் கைகளில் ஆவியை ஒப்புக் கொடுக்கும் முன்பாக பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று (லூக். 23:44) பகலிலே திடீரென இருளாகும் போது, ஏன் இப்படி என்ற பயம் கலந்த கேள்வி எங்கும் எழுந்திருக்கும் தானே! அதற்கான பதிலை எல்லாரும் பெற்ற பின்தானே அமைதியடைந்திருப்பார்கள். அப்படியானால், இயேசுவின் மரணமும் யாருக்கும் தெரியாமல் ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல. அதுபோல்தான் அவருடைய உயிர்த்தெழுதலும். எப்படியெனில் எம்மாவுக்கு நடந்து சென்ற சீடர்களில் ஒருவன், கூட வருவது இயேசு என்று தெரியாமல், "*.....இந்நாட்களில் எருசலேமில் நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான்*" (லூக். 24:18). அந்தளவு அவருடைய உயிர்த்தெழுதல் பிரபலம்.

இப்படி பூமியெங்குமுள்ளவர்கள் அனைவரும் அறியும் படியாக நடந்த இயேசுவின் ஊழியம் பற்றி நீங்கள் எந்தளவு அறிந்து வைத்துள்ளீர்கள்? இயேசுவை தேவன் ஒரு நோக்கத் தோடு பூமிக்கு அனுப்பிக் கொடுத்தார் என்பதும், அந்த இயேசு வைத் தன்னை அனுப்பின பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும் படியானதொரு ஊழியத்தைச் செய்தார் என்பதும் உங்களுக்குத் தெரியுமா? இல்லையா? தெரியுமானால், அந்த ஊழியத் திற்கான பலனை உங்கள் வாழ்க்கையில் பெற்று விட்டீர்களா? *பாவிகளை இரட்சிக்க இயேசு வந்தார்* என்று வசனம் சொல்லுகிறதே (1தீமோ. 1:15) அப்படியானால், பாவ மன்னிப்புக்கென்று நீங்கள் இரட் சிப்படைந்து விட்டீர்களா? இல்லையென்பது உங்கள் பதிலாக இருக்குமானால், அதற்கான முயற்சியை, வேத வசனங்களின்படி இப்பொழுதே எடுத்து இரட்சிப்படையுங்கள்.

## III கர்த்தருடைய சபையின் ஆரம்பம் ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல

“இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல” என்ற தலைப் பின் கீழாக நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், கிறிஸ்து வின் சபையின் ஆரம்பம் ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல என்பது.

இன்றைக்கு அநேகரிடம் இயேசுவாலே வாக்களிக்கப்பட்டு (மத். 16:18) தம்முடைய இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த (அப். 20:28) சபையைக் குறித்துப் பேசினால், ஏதோ இந்தச் சபையின் ஆரம்பம் ஒரு மூலையிலே நடந்த ஒரு சம்பவம் போல, கிறிஸ்து வின் சபை பற்றி நாங்கள் கேள்விப்பட்டதே இல்லையென்று கூறுகின்றனர். அப்படிக் கூறுவது ஆன்மீகக் காரியங்களில் அவர் களுக்குள்ள அறியாமையை வெளிப்படுத்துகிறதென்பது கூட அவர்களுக்குப் பாவம் தெரியவில்லை!

மத உலகில், இன்றைக்கு எப்படித் தங்களைப் பெரிய மனிதர்கள் என்று கூறிக் கொள்ளும் அநேகருக்குக் கிறிஸ்துவால் கட்டப்பட்ட ஒன்றான மெய்ச் சபை விளங்காமலிருக்கிறதோ அதே போலத்தான், அன்றைக்கு அரியணையில் வீற்றிருந்த அகிரிப்பாவுக்கும் புரியாத ஒன்றாகவே இருந்துள்ளது. புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றைப் புரியாமலிருந்த அகிரிப்பாவும், அவனோடிருந்தவர்களும் புரிந்து கொள்ளும்படியாகவே, இது ஒரு மூலையிலே நடந்த காரியம் அல்ல என்று அழுந்தக் கூறினார் பவுல்.

இதை வாசிக்கும் அன்பானவர்களே, அகிரிப்பா இருக்கட் டும், இப்பொழுது உங்களைப் பார்த்துக் கேட்கிறேன், கிறிஸ்து வின் சபையை நீங்கள் அறிந்தும், புரிந்தும் வைத்துள்ளீர்களா? ஒருவேளை, நீங்கள் அறியாமலிருந்தால் அதுபற்றிக் கூறுகிறேன் கொஞ்சம் கவனியுங்கள். இச்சபை இயேசு பரமேறிய பின் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில், எருசலேம் பட்டணத்தில் ஆரம்ப

மாகியிருந்தாலும் (அப். 2ம் அதி), உண்மையில் இது பற்றிய காரியங்கள் பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே வெளிப்படத் துவங்கி விட்டது. கிறிஸ்துவால் கட்டப்பட்ட சபை குறித்து சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஏசாயா தீர்க்கன், ***"கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக் கப்பட்டு மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்"*** என்று கூறியுள்ளார். (ஏசாயா 2:2) தானியேல் தீர்க்கன், ***"அந்த ராஜாக் களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்"*** என்று சொல்லி யுள்ளார் (தானி 2:44). இவர்கள் சொன்னது தான், அப்போஸ் தலர் 2-ம் அதிகாரத்தில் அப்படியே நிறைவேறியுள்ளது. கிறிஸ்து வின் சபை, ஏதோ நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த ஒரு காளானல்ல அல்லது இருக்கின்ற நூற்றுக்கணக்கான பிரிவி னை சபை கூட்டங்களில் இதுவும் ஒன்றல்ல.

கிறிஸ்துவின் சபை தேவனால் திட்டமிடப்பட்டு (எபேசி 3:9-11) பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்களால் முன்னுரைக்கப்பட்டு (ஏசாயா 2:2), யோவான் ஸ்நானகனால் பிரசங்கிக்கப்பட்டு (மத் தேயு 3:17) இயேசுவாலே வாக்களித்துக் கட்டப்பட்டு, (மத் தேயு 16:16-18; அப். 2ம் அதி) சபையானது பெந்தெகொஸ்தே நாளில், எருசலேம் பட்டணத்தில் 17 தேசத்தார் கூடியிருந்தபோது மகத்தான முறையில் ஆரம்பமாகியுள்ளது. அன்று, ஆயிரக்காணக் கானவர்கள் கூடியிருந்த ஒரு பெரிய கூட்டத்தில் பேதுரு செய்த பிரசங்கத்தைக் கேட்டு 3000 பேர் இரட்சிக்கப்பட்டுள்ளனர் (அப். 2:41).

வேத வசனங்களின்படி உண்மை இதுவாக இருக்கும் போது, கிறிஸ்துவின் சபை பற்றி எனக்குத் தெரியாது என்று ஒருவர் எப்படிச் சொல்ல முடியும்? அப்படிச் சொல்வதற்கு ***கிறிஸ்துவின் சபையின் துவக்கும் என்ன ஒரு மூலையிலே நடந்த காரியமா?*** நிச்சயமாக அப்படி இல்லை. கிறிஸ்துவின் சபை வேத வசனங்க ளின் ஒட்டுமொத்த நிறைவேறுதல். இதிலே யாருக்கும் எந்தச் சந்தேகமும் வேண்டாம். அப்படிச் சந்தேகப்படுவீர்களானால், பரலோகம் உங்களுக்கு சந்தேகமாகிவிடும். இது உண்மை!

அருமையானவர்களே, இப்படிப்பட்ட கிறிஸ்துவின் சபை யில் நீங்கள் அங்கமாக இல்லையானால், அகிரிப்பாவும், பெஸ்து வும், பேலிக்ஸ்ம் எங்கே சென்றார்களோ அங்கே நீங்களும் செல்ல நேரிடும். வேண்டாம், வேண்டாவே வேண்டாம். இன்றே, கிறிஸ் துவால் கட்டப்பட்ட சபையில், விசுவாசித்து (எபி. 11:6), மனந் திரும்பி (**II** கொரி. 7:10), அறிக்கையிட்டு, (அப். 8:37) பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று (அப். 22:16), கர்த்த ராலே சபையில் சேர்க்கப்படுங்கள். மறுமையை தேவாதி தேவ னோடு கழியுங்கள். ஆமென்!

**E.Z.S. இராஜநாயகம்**

# நாங்கள் ஏன் வேதாகமத்தை விசுவாசிக்கிறோம்?

வேதாகமம் மிகத் தொன்மையான ஒரு புத்தகம். இதை எழுதுவதற்கு நூற்றுக்கணக்கான வருடங்கள் பிடித்தது. இதன் ஆசிரியர்கள் பல்வேறுபட்ட பின்னணியைச் சேர்ந்தவர்கள். இருப்பினும், அவர்கள் எழுதினவைகளையெல்லாம் ஒன்று சேர்க்கும் போது, எவ்வித முரண்பாடும் இல்லாமல் ஒரே கருப் பொருளை உடைய ஒரு முழுமையான புத்தகமாக மாறிவிடுகிறது. இது சிருஷ்டிப்பின் தொடக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டு, பூமியும் அதிலுள்ளவைகளும் அழிவதோடு முடிவடைகிறது. இப்புத்தகம் மனிதனைப் பற்றிச் சொல்லும் போது, மனிதனுடைய நல்ல குணம் பற்றியும், மோசமான குணம் பற்றியும், பேசி மனிதனுக்கு ஓர் இரட்சகர் அவசியம் என்று காட்டுகிறது. ஒப்பற்ற புத்தகம் என்னும் பொருளை உடைய பைபிள் இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது; பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு என்று. பழைய ஏற்பாடு 39 புத்தகங்களை உள்ளடக்கியது, புதிய ஏற்பாடு 27 புத்தகங்களை உள்ளடக்கியது. எனவே, வேதாகமம் மொத்தமாக 66 புத்தகங்களைக் கொண்டது.

இன்னும், வேதாகமம் மூன்று முக்கிய காலங்களை உள்ளடக்கியுள்ளது. முதலாவது, முற்பிதாக்களின் நாட்கள். இது ஆதாமில் தொடங்கி மோசேயின் நாட்கள் வரை, அதாவது 2500 ஆண்டு காலம் நீடித்தது. இந்த காலத்தில் தேவன் பிதாக்களிடத்தில் பேசினார். அவர்கள் தங்கள் குடும்ப அங்கத்தினர்களுக்கு தேவனுடைய சித்தத்தைத் தெரிவித்தார்கள். இரண்டாவது, மோசேயின் காலம். இது மோசேயில் தொடங்கி கிறிஸ்துவின் காலம் வரை சுமார் 1500 ஆண்டுகளை உள்ளடக்கியது. இந்தக் கால கட்டத்தில் தேவன் மோசேயின் பிரமாணம் என்றழைக்கப்படுகிற எழுதப்பட்ட பிரமாணத்தின் மூலமாகப் பேசினார். மூன்றாவது, கிறிஸ்தவ காலம் அல்லது கிறிஸ்துவின் பிரமாணத்தின் காலம். இது கிறிஸ்துவின் மரணத்தோடு ஆரம்பித்து கிறிஸ்து திரும்ப வரும் வரை நீடிக்கும். இந்த காலத்தில் ஏற்கனவே 2000 வருடங்கள் உருண்டோடி விட்டன. இனிமேல் எத்தனை ஆண்டுகள் நீடிக்கும் என்பது தேவனைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. ஒருவர் இந்தக் காலங்களை இப்படியாக விவரித்திருக்கிறார்; முற்பிதாக்களின் காலத்தை நட்சத்திர ஒளியை உடைய காலம் என்றும், மோசேயின் காலத்தை நிலவொளி உடைய காலம் என்றும், கிறிஸ்தவ காலத்தை சூரிய ஒளி உடைய காலம் என்றும் வர்ணித்திருக்கிறார். இதன் கருத்து என்னவென்றால், ஒவ்வொரு காலத்திலும் ஒளி கூடிக் கொண்டே வருகிறது. சூரிய ஒளி காலம் என்பது முழுமையான வெளிச்சம் கொண்ட காலம் என்பதை அடையாளப்படுத்துகிறது.

வேதாகமத்தில் இரண்டு முக்கிய ஏற்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடியால், இவ்விரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டை நாம் புரிந்து கொள்வது அவசியமாயிருக்கிறது. முதலாவது, தேவன் தம்முடைய சித்தத்தை தம் ஜனங்களுக்கு வெளிப்படுத்தினார். இது, முற்பிதாக்களின் காலத்திலும், மோசேயின் பிரமாண காலம் முழுவதிலும் தொடர்ந்தது. அதன் பின்பு, தேவன் தம் ஜனங்களுக்கு ஒரு புதிய பிரமாணத்தை ஏற்படுத்தினார். இந்தப் பிரமாணம் இயேசு கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டு இந்நாள் வரை நம்மைத் தொடர்ந்து கட்டுப்படுத்துகிறது. தேவன் ஒரு புதிய சித்தத்தைக் கொடுக்கும் போது, அது முதல் ஏற்பாட்டை அல்லது முந்தின சித்தத்தை பழையதாக்குகிறது. ஆகவே, அந்த முதல் ஏற்பாடு ஒரு சட்டமாக நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. ஆனால், இன்றும் அது வரலாறாக இருந்து, தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களை அவர் எப்படி ஆசீர்வதித்தார் என்றும், கீழ்ப்படியாதவர்களை அவர் எப்படித் தண்டித்தார் என்றும் அநேக உதாரணங்களைத் தருகிறது. அத்தோடு அது வாழ்க்கைக்கான அநேக நடைமுறைக் கொள்கைகளை உள்ளடக்கி, அதன் மூலம் நாம் எல்லோருமே எப்படிப் பயன்பெறலாம் என்று காட்டுகிறது. அதே வேளையில், ஒரு பிரமாணமாக இருந்து இன்று அது நம்மைக் கட்டுப்படுத்து வதில்லை. புதிய ஏற்பாட்டில் நாம் காணும் பிரமாணம் தான் இன்று நம்மைக் கட்டுப்படுத்துகிறது.

கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது, புதிதாய் ஒரு பிரமாணத்தைத் தரும்படி பழைய பிரமாணத்தை எடுத்துப் போட்டார். எபிரெய ஆசிரியரின் வார்த்தைகளை தயவு செய்து இங்கே கேளுங்கள். ஏனென்றால், *“எங்கே மரணசாசனமுண்டோ, அங்கே அந்தச் சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே”* (எபிரெயர் 9:16,17). எபிரெய ஆசிரியர் தொடர்ந்து சொல்லும் போது, தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன் என்று சொன்னார். “இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார். இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்” (எபிரெயர் 10:9,10).

முன்பு குறிப்பிடப்பட்டிருக்கிற காரியங்களை வைத்துப் பார்க்கும் போது, வேதாகமம் ஏன் மற்றுமொரு வரலாற்று புத்தகமாக இருக்கக் கூடாது? உண்மை தான், இது வரலாற்று புத்தகம் தான். அத்தோடு, வேதாகமம் ஒரு புவியியல் புத்தகம், இது ஒரு அறிவியல் புத்தகம். இது ஒரு சிறந்த இலக்கிய புத்தகம். ஆனால், வேதாகமம் இப்படிப்பட்ட புத்தகங்களையெல்லாம் விட மேலானது. வேதாகமம், தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டுள்ள தேவனால் ஏவப்பட்ட ஒன்று என்று விசுவாசிக்கிறோம்.

இது கர்த்தருடைய வார்த்தைகளைக் கொண்டது என்று கூறுகிறது (எபிரெயர் 14:1) இது பற்றி பவுல் இப்படியாகச் சொன்னார். வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக் கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (II தீமோத்தேயு 3:16,17) பேதுரு அப்போஸ்தலனும், வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (II பேதுரு 1:20,21) என்று வெளிப்படுத்தியுள்ளார்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தை அல்லது கர்த்தருடைய வார்த்தை என்றழைக்கப்படுவதால் நாங்கள் அதை விசுவாசிக்கிறோம். கிறிஸ்து பிதாவை நோக்கி ஜெபித்தபோது, "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என்றார் (யோவான் 17:17). பவுலடியார் ரோமாபுரியாருக்கு இப்படியாக எழுதினார். "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக. சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி" என்று (கொலோ. 3:16). மேலும், பவுல், "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17) என்கிறார். இன்னும் பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும் போது, "சமயம் வாய்த்தாலும் வாய்க்கா விட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவச னத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும், கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு" என்கிறார். (தீமோ. 4:2). மேலும், யாக்கோபு ஆசிரியர் சொல்லும் போது, "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாத படிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களையும் இருங்கள்" (யாக்கோபு 1:22). பரிசுத்த வேதாகமம், தேவனுடைய வார்த்தை, கர்த்தருடைய வார்த்தை, வேத வாக்கியங்கள், தேவனுடைய கட்டளைகள், சத்தியம் என்றும் அழைக்கப்படுகிறது. அது அப்படித்தானென்று நாங்கள் விசுவாசிக்கிறோம். நாங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிறோம். ஏனெனில், தொல்பொருள் ஆராய்ச்சி, வரலாறு, புவியியல், அறிவியல் போன்ற துறைகளின் இன்றைய தரத்தோடு வேதாகமம் வெளிப்படுத்தியிருக்கின்ற உண்மைகள் அப்படியே ஒத்துப் போகிறது. உதாரணத்திற்கு, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் மகத்தான கண்டுபிடிப்புகளுக்கு பல நூறு ஆண்டுகள் முன்பாகவே, வேதாகமம் இந்தக் காரியங்களனைத்தையும் வெளிப்படுத்தி

யிருக்கிறது. சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய கண்டு பிடிப்புகளில் ஒன்று சவக்கடல் தோல் சுருள். அவர்கள் அப்படிக் கண்டுபிடிப்பதற்கு முன்பாகவே பழைய ஏற்பாட்டு எழுத்துக்கள் கி.பி. 900 முதல் 1000-ம் ஆண்டுகளைச் சேர்ந்த தோல் சுருள் களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. எஸ்தர் புத்தகம் தவிர, பழைய ஏற்பாட்டு புத்தகங்களை உள்ளடக்கிய சவக்கடல், தோல்ச் சுருள், கி.மு. 200 மற்றும் கி.பி. 68 காலத்தைச் சேர்ந்தவை. இந்த எழுத்துக்கள், பழைய ஏற்பாட்டு வசனங்களெல்லாம் உண்மை தான் என்பதை உறுதிப்படுத்த உதவி செய்கிறது. வரலாற்றைப் பொறுத்த வரை, வேதாகமமும், உலக வரலாறும் ஒன்றுக்கொன்று ஒத்துப் போகிறது. புவியியலில் இன்று நமக்கு பரிச்சயமான பட்ட ணங்கள், மலைகள், கடல்கள் எல்லாம் வேதாகமத்தின் மூலமாக நாம் அறிந்து கொள்கிறோம். சிலர், வேதாகமும், விஞ்ஞானமும் ஒத்துப் போவதில்லை என்று நினைத்தார்கள். ஆனால், இது உண்மையல்ல. விஞ்ஞானம் என்ற வார்த்தை, உண்மை என்கிற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. நிச்சயமாகவே, வேதா கமம் உண்மையோடு முரண்படுவ தில்லை. வேத வாக்கியங் களும், தவறான அறிவியலும் அல்லது மனிதர்களுடைய கொள் கைகளும் ஒன்றுக்கொன்று முரண்படும். வேதாகமம், விஞ்ஞான மும் ஒத்துப்போகிறது என்பதற்கு ஓர் அருமையான உதாரணம் பூமி உருண்டை என்பது தான் (ஏசாயா 40:22; யோபு 26:7). இது தவிர, உங்களுக்குக் கொடுப்பதற்கு எங்களிடம் ஏராளமான உதாரணங்கள் உண்டு. ஆனால், நேரம் தான் இல்லை.

வேதாகமம் தேவனுடைய வார்த்தை என நாங்கள் விசுவா சிப்பதற்குக் காரணம், இதில் இடம்பெற்றுள்ள தீர்க்கதரிசனங்க ளெல்லாம் தவறாமல் அப்படியே நிறைவேறியிருப்பது தான். அதில் ஒன்று, இயேசு கிறிஸ்து ஒரு கன்னியினிடத்தில் பிறப்பார் என்பதாகும் (ஏசாயா 7:14). மத்தேயு 1 ஆம் அதிகாரத்தில், கன்னி யாகிய மரியாளிடத்தில் கிறிஸ்து பிறந்ததின் மூலம் இந்த தீர்க்க தரிசனம் அப்படியே நிறைவேறியது. யோவேல் 2:28, 29 வசனங் களில், மாம்சமான யாவர் மேலும் கர்த்தருடைய ஆவி ஊற்றப் படும் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. இது, அப்போஸ் தலருடைய நடபடிகள் 2 ஆம் அதிகாரத்தில் நிறைவேறியது. இவை தவிர அநேக தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டு, பின்பு நிறை வேறியதை நாம் காண முடியும்.

வாழ்க்கையின் மிகப்பெரிய கேள்விகளுக்கு வேதாகமம் பதில் அளிப்பதால் நாங்கள் அதை விசுவாசிக்கிறோம். வேதாக மம் மனிதன் எங்கே இருந்து வந்தான் என்றும், அவன் ஏன் இங்கே இருக்கிறான் என்றும், அவன் எங்கே போகிறான் என்றும் நமக்குச் சொல்கிறது. அதுமாத்திரமல்ல, இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்? என்கின்ற கேள்விக்கு வேதாகமம் பதில் அளிக்கிறது (அப் 2:37,38; அப் 16:30-33). வேதாகமம், மனிதனின் ஒட்டுமொத்த நன்மைக்காக அவன் மீது ஒரு

மகத்தான செல்வாக்கை செலுத்துவதால் நாங்கள் அதை விசுவாசிக்கிறோம். வேதாகமம் பாவத்தைக் கண்டித்து, நீதியான வாழ்க்கையை ஊக்கப்படுத்துகிறது. இதன் காரணமாக, உலகம் ஒரு சிறந்த இடமாக மாறியிருக்கிறது.

கர்த்தருடைய வார்த்தை ஒரு போதும் ஒழிந்து போவதில்லை என்பதால் நாங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிறோம். கிறிஸ்து இப்படியாகச் சொன்னார். "*வானமும், பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை*" (மத்தேயு 24:35). மேலும், கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்று பேதுரு சொல்கிறார் (பேதுரு 1:25). இன்னும், கடைசி நாளில் தான் சொல்லிய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும் என்று கிறிஸ்து சொன்னார் (யோவான் 12:48).

வேதாகமத்திற்கு அநேக எதிரிகள் இருந்தார்கள் என்பது உண்மைதான். அவர்கள் வந்தார்கள், போனார்கள். ஆனால், வேதாகமம் இன்றும் நிலைத்து நிற்கிறது. இந்தப் புத்தகத்தைப் பற்றி உங்கள் மதிப்பீடு என்ன? இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அநேகர் விசுவாசிக்கிறார்கள். உண்மையில், உலகிலேயே அதிகமாக மொழியாக்கம் செய்யப்படும் புத்தகம் வேதாகமம் தான். அது மாத்திரமல்ல, உலகிலேயே அதிகமாக விற்பனையாகும் புத்தகமும் இது தான்.

நீங்கள் ஒவ்வொருவரும் வேதாகமத்தை வாசிக்கும்படி நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படி கிறிஸ்து சொன்னார். (யோவான் 5:39) *நம்மை நாம் தேவனுக்கு முன்பாக உத்தமர்களாக நிறுத்தும் படி வேத வானங்களைப் படிக்க வேண்டும் என பவுல் வலியுறுத்தினார்* (II தீமோத்தேயு 2:15). மறுபடியும், கிறிஸ்து மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று சொன்னார் (மத்தேயு 4:4). யோவான் இப்படியாக எழுதியுள்ளார். "*இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவர்களும், கேட்கிறவர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்கிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது*" என்று. (வெளி 1:3).

நீங்கள் தேவனுடைய வார்த்தையை வாசித்து, படித்து, அதை விசுவாசித்து தேவனில் நம்பிக்கை வைத்து, அதன் உபதேசத்துக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் நீங்கள் வைத்திருக்கிற விசுவாசத்தை அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றால், அதாவது, தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டால் கர்த்தர் உங்களை இரட்சித்துத் தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார் (மாற்கு 16:16; அப் 2:38,47).

J.C. **சோட்**

## பரிசுத்த ஆவியானவரால் நற்சாட்சி பெற்றவர்கள்

கிறிஸ்தவ உலகிலே அப்போஸ்தலனாகிய பவுலைப் பற்றி தெரியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். அப். 7:58-ல் நாம் வாசிக்கிறபடி, பவுலினுடைய பெயர் சவுல் என்பதாகும். பவுல் சிலிசியா நாட்டுக்குத் தலைநகரமாகிய தர்சு என்னப்பட்ட ஊரிலே பிறந்தார். எருசலேமிலே கனம் பெற்ற நியாய சாஸ்திரி யாகிய கமாலியேல் கொடுத்த போதனையை கற்றுக் கொண்டார்.

அப்போஸ்தலன் பவுல் 13 நிருபங்களை எழுதினார். அதில் தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டு நிருபங்களிலும் பவுல் தேவையான அனைத்து ஆலோசனைகளையும் பரிசுத்த ஆவியா னவரால் ஏவப்பட்டு தீமோத்தேயுவுக்கு அளிக்கிறார். விசுவாசத் தின் நான் பெற்ற உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவே என்று சொல்வது பவுல் தீமோத்தேயுவின் மேல் வைத்திருக்கும் அன்பும் நம்பிக்கையும் வெளிப்படுகிறது. சின்ன ஆசியாவில் பிறந்த வனாகிய இவனுடைய தகப்பன் கிரேக்கன், தாய் யூத ஸ்திரீ இவன் தாயாகிய ஐனிக்கேயாளும், பாட்டியாகிய லோவிசாளும் இவளைச் சிறுபிராய முதலே யூதருடைய வேத சாஸ்திரத்தில் நன்றாய் பழக்கி வந்தார்கள். பவுல் முதல் முறை லீஸ்திராவுக்கு வரும்போது இவனும் இவனுடைய தாயாரும் கிறிஸ்தவ மார்க்கத் துக்கு வந்ததாகத் தோன்றுகிறது. ஏனென்றால், பவுல் இரண்டாந் தரம் வரும்போது தீமோத்தேய சபையில் பெயர் பெற்றவனா யிருந்தான் (அப். 16:1) இரண்டாம் சுவிசேஷப் பயணத்தில் இவனைத் தமக்குத் தோழனாக ஏற்படுத்திக் கொண்டார். (அப். 16:3) பவுலோடு சுவிசேஷ வேலை செய்யும் பொருட்டு லீஸ்திரா விலுள்ள மூப்பர்களும், பவுலும் இவனைப் பிரதிஷ்டை செய்தார் கள் (1தீமோத். 4:14; 2தீமோத்.1:6).

பவுல் மூன்றாம் நற்செய்திப்பிரயாணம் பண்ணும்போது தீமோத்தேயு எபேசு பட்டணத்தில் பவுலோடு தங்கியிருந்து, பின்பு மக்கெதொனியாவுக்குப் போனான் (அப். 19:22). பவுல் ரோமா புரியில் சிறைச்சாலையில் இருந்தபோது தீமோத்தேயு அவருடன் இருந்தான் (பிலி. 1:1;2:9, கொலோ. 1:1; பிலோ. 1) பவுல் இரண் டாந்தரம் ரோமாபுரியில் சிறைச்சாலையில் இருக்கும்போது தீமோத்தேயுவைத் தன்னிடம் வரும்படி அழைத்தார். (II தீமோத். 4:9,21) இதற்கு பின்பு தீமோத்தேயு சிறைச் சாலையில் வைக்கப் பட்டான் (எபி. 13:23).

பிரியமானவர்களே, மேலே நாம் படித்த காரியங்கள் இளைஞன் தீமோத்தேயுவைப் பற்றி ஓரளவு நாம் புரிந்து கொள்ள உதவியிருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த தீமோத்தேயுவுக்கு நிருபத்தை எழுதும்போதுதான் பரிசுத்த ஆவியானவர் பவுலைக் கொண்டு இப்படியாகக் கூறுகிறார். *"உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவு கூறுகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனசாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன். அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்து; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்".* (II தீமோத். 1:4,5). ஒரு தீவிரமான ஊழியத்தை தீமோத்தேயு செய்தானென்றால், அதற்குக் காரணம் அவனுக்குள்ளிருந்த மாயமற்ற விசுவாசம். இந்த மாயமற்ற விசுவாசம் அவனுக்கு எப்படி கிட்டியது? இந்த மாயமற்ற விசுவாசம் அவனுக்கு தேவன் மேல் வைக்கும் விசுவாசத்தை கற்றுக் கொடுத்ததினால் தான் அவன் இவ்வளவு சீக்கிரம் அப்போஸ்தலன் பவுலோடு சேர்ந்து, பலமாய் உபயோகப்படுத்தப்பட்டான். வாலிப வயதிலேயே சுவிசேஷப் பயணம் செய்ய முடிந்தது.

இன்றைக்குள்ள தாய்மார்கள் எத்தனைபேர் ஐனிக்கேயாளைப்போல் இருக்கிறோம்? தேவன் மேல் விசுவாசம் வைப்பதற்குப் பதில் உலகத்திலும், உலகத்திலுள்ள காரியங்களிலும் விசுவாசம் வைக்க நம் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறோம். உலகக் கல்வி, ஞானம், அறிவு, கேள்வி இவைகளில் தன் மக்கள் சிறந்து விளங்க வேண்டும் பேரும், புகழும் பெற வேண்டும் என்றுதான் அநேக தாய்மார்கள் மனக்கோட்டை கட்டுகிறார்கள் தேவனுக்கடுத்த காரியங்களைத் தவிர மற்ற எல்லாமே இக்கால இளைஞர்களுக்குத் தெரிகிறது. விசுவாசமில்லாமல் பிள்ளைகள் வளர்கிறார்களென்றால் அதற்கு காரணம் பெற்றோர் தான்; அதிலும் குறிப்பாக தாய்மார்கள் தான் காரணம்.

II தீமோத். 3:15-ல் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை. இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத் தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவன் என்று உனக்குத் தெரியும் என பவுல் கூறுகிறார். சிறுவயது முதல் தீமோத்தேயு வேதத்தை நேசித்தான், வாசித்தான். இவ்வாறு செய்ய வைத்தது அவன் தாய், நாமும் கூட நம் பிள்ளைகளை சிறுவயது முதற்கொண்டே வசனங்களை வாசிக்கச் செய்ய வேண்டும். அது அவர்களுக்கு எதிர்காலத்தில் ஆசீர்வாதமுள்ளதாக அமையும். சங்கீதக்காரன் கூறும்போது உம்முடைய கட்டளைகளை கைக்கொண்டிருக்கிறபடியால் முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன். *"உம்முடைய சாட்சி கள் என் தியானமாயிருக்கிறபடியால் எனக்கு போதித்தவர்களெல் லாரிலும் அறிவுள்ளவானாயிருக்கிறேன்".* (சங். 119:99, 100) என்று கூறுகிறார். வேத வசனம் ஒருவனை ஞானவானக்குகிறது. இந்த இரகசியத்தை அறிந்து தான் ஐனிக்கேயாள் தன் மகனுக்கு வேதத்தை வாசிக்கக் கற்றுக்கொடுத்தாள் போலும்.

II தீமோத்தேயு 2:3-ல் “ ***நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர் சேவகனாய் தீங்கநுபவி*** ” என்கிறார். II தீமோத் 4:5லும் தீங்கநுபவி என்று தீமோத்தேயுவிடம் கூறுகிறார். இவ்விதமாக ஒரு பக்குவமான ஊழியனாக தீமோத்தேயு சிறந்து விளங்கு கிறான். துன்பத்தினுடே சென்று சுவிசேஷத்தை அறிவிக்கிறான். சிறையில் அடைக்கப்படுகிறான். இப்படியெல்லாம் ஒரு நல்ல தீமோத்தேயுவை நாம் வேதத்தில் காணமுடிகிறதென்றால் அது அவன் தாயினுடைய முயற்சிதான்.

இந்த தாய்க்கு அந்த விசுவாசமானது அவளுடைய தாயா கிய லோவிசாளுக்குள் இருந்து வந்தது. தாய், பாட்டி ஆகிய இரு வருக்குள்ளும் இருந்த விசுவாசம்தான் தீமோத்தேயுவை வல்ல மையுள்ளவானாக மாற்றியது.

கிறிஸ்துவுக்குள் அருமையான தாய்மார்களே! நாமும் நம் பிள்ளைகளைத் தேவனுக்காக வளர்ப்போம். தேவனுக்கடுத்த காரியங்களுக்கு முதல் இடத்தை நம் பிள்ளைகள் கொடுக்க வேண்டும். முதலாம் நூற்றாண்டில் இளைஞன் தீமோத்தேயு விசுவாசமுள்ளவனாய் வாழ்ந்தானென்றால் இன்றைக்கு 21ம் நூற்றாண்டில் வாழும் நாமும் நம் பிள்ளைகளை தீமோத்தேயுக் களாக வளர்க்க முடியும். சுவிசேஷத்தை, உண்மைச் சத்தியத்தைக் கூற, வேதாகமத்தில் உள்ள ஒரே சபையை உலகிற்கு பறை சாற்ற இளைஞர்கள் தேவை. நம் பிள்ளைகளைத் தேவனுக்காய் அர்ப் பணிப்போம். நாமும் ஐனிக்கேயாளைபோல் இருப்போம். ஐனிக் கேயாளும், லோவிசாளும் பரிசுத்த ஆவியானவரால் கூறப்பட்டு வேதாகமத்தில் நற்சாட்சிப்பெற்றதுபோல நாமும் தேவனால் நிறைவுகூரப்பட்டு நம் மக்களோடு பரலோகத்தில் தேவனோடு என்றென்றும் நிலைத்திருப்போம். அப்படி வாழ தேவன் நமக்கு அநுக்கிரகம் செய்வாராக!.

**ரேச்சல் இராஜநாயகம்**

## நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள்

**(கர்த்தருடைய பந்தியில்) 1 கொரி. 11:24,25**

1. இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் வந்தர் என்று நினைவு கூரும்படி ... (லூக். 19:10)
2. சிலுவையில் அவர் பட்ட பாடுகளை நினைவு கூரும்படி .... (மத். 26:36)
3. அவரின் உயிர்த்தெழுதலை நினைவு கூரும்படி ... (லூக். 24:1-6)
4. அவர் பரமேறிச் சென்றதை நினைவு கூரும்படி ... (அப். 1:9-11)
5. அவரது வருகையை நினைவு கூரும்படி ... (II தெச. 1:7,8)

வாலிபர் பகுதி

# திரும்பி பார்ப்போம் வாருங்கள்

சபைக்கும், சத்தியத்திற்கும், தூணும் ஆதாரமுமாய் இருக்கிற, இருக்கப் போகிற வாலிப உள்ளங்களுக்கு உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தினாலே வாழ்த்துக்கள். இந்த கட்டுரையின் மூலமாக உங்கள் ஒவ்வொருவரின் இருதயத்தில் தேவ வசனத்தை விதைக்கும் வாய்ப்பு கிடைத்தற்காக நான் மிகவும் சந்தோஷம் அடைகிறேன். இளவயதும் வாலிபமும் மாயையே (பிர. 11:10) என்று பிரசங்கி சொல்லுகிறபடியால் இந்த வாலிபப் பிராயத்தை நாம் பிரயோஜனமாக பயன்படுத்த வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலும் எபேசு பட்டணத்தாருக்கு எழுதுகிற போது, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் (எபே. 5:16) என்று எழுதுகிறார். நாட்கள் மற்றவர்களுக்கு பொல்லாதவைகளாயிருக்கிறதோ இல்லையோ, வாலிபர்களாகிய நமக்கு மிகவும் பொல்லாததாயிருக்கிறது. எனவே, நாட்களை நாம் எச்சரிக்கையாய், ஜாக்கிரதை யாய், பிரயோஜனப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். இந்த வாலிப பிராயத்திலே நின்று கொண்டு நாம் கடந்து வந்த பாதையை சற்று சீர்தூக்கி, திரும்பிப் பார்ப்போம்.

## கிறிஸ்துவை அறியாத போது இருந்த வாழ்க்கை

நம்முடைய வாழ்க்கையில் நமக்கு ஏற்படுகிற பல பிரச்சினைகளை நாம் சற்று முன்னால் போய்ப் பார்ப்போமானால் என்றால் எல்லா பிரச்சினைகளுக்கும் காரணகர்த்தா நாமாகத்தான் இருப்போம் என்று தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும். சில நாளைக்கு முன்பாக ஒரு வலிப நண்பரை சந்தித்தேன். அவர் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்தார். அவரைப் பார்த்து பேசி கொண்டு இருந்த போது இறைவன் தான் எனக்கு இந்த தண்டனையை கொடுத்தார் என்று வேதனையோடு வெளிப்படுத்தினார். ஆனால், அவர் எல்லாவித தீமையான பழக்க வழக்கங்களுக்கு அடிமையாயிருந்தபடியால் அவருக்கு அந்த வியாதி வந்திருந்தது. தன் தவறை உணராமல் அவர் அதை யோசிக்காமல் தேவனைக் குறை கூறிக்கொண்டு இருந்தார். எல்லா பாவங்களையும் நாமே செய்துவிட்டு பிரச்சினைகள் முற்றிப் போகும் போது நாம் அந்தப் பழியை தேவன் மீது போட்டு விடுகிறோம். “அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான் ” (யாக். 1:14) என்று பரிசுத்த ஆவியானவர் யாக்கோபை கொண்டு விளம்பி இருக்கிறார்.

இந்த வாலிபப் பருவத்தில் தேவனை மறந்து எதையாவது புதிதாக கற்றுக் கொள்ள வேண்டும். அதைச் செய்ய வேண்டும். இதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகின்ற போது சாத்தான் தீமையான பழக்கவழக்கங்களுக்கு அவர்களை இழுத்து போட்டு விடுகிறான். அதனால் தான் பிரசங்கி சொல்கின்ற போது, "*உன் வாலிப பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை....*" (பிர. 12:1) என்று புத்தி சொல்லுகின்றார். நாம் கிறிஸ்துவை அறியாத போது சந்தோஷத்தை இழந்து பாவக் கட்டுகளினால் கட்டப்பட்டு இருந்தோம். நம்முடைய வாழ்க்கை தேவனோடு இல்லாமல், தனித்து பிரிந்து போய் இருந்தோம். வசனம் ஒரு படி மேலே போய், நாம் அக்கிரமங்களினாலும், பவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தோம் (எபே. 2:1) என்று கூறுகிறது. இருளின் அதிகாரத்தில் (கொலோ. 1:13) இருந்த நம்மை கிறிஸ்து தம்முடைய ஒளியினிடத்திற்கு நம்மைக் கொண்டு வந்து சேர்த்து இருக்கிறார். (1 பேது 2:9) ஆதி தகப்பனாகிய ஆதாமின் கீழ்படியாமையினாலே உலகத்திலே பாவம் வேரூன்றி நன்மை தீமையறியத்தக்க பெரிய விருட்சமாக வளர்ந்து அந்த பாவ விருசத்தின் நிழலில் குடியிருந்த நாம் அநாதி தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் கீழ்படிதலினாலே மீட்கப்பட்டு இப்பொழுது ஜீவ விருட்சம் என்னும் இரட்சிப்பின் நிழலில் குடியிருக்கிறோம்.

ஆகையால், வாலிப உள்ளங்கேளே! உங்கள் சரீரம் தேவனுக்குரியது. அதை பரிசுத்தத்தோடே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். உங்களை கிறிஸ்து பாவத்திலிருந்து மீட்டு எடுத்து இருக்கிறார். ஆகையால், உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்பட வேண்டும் (1 தெச. 5:23) என்று தேவன் விரும்புகிறார்.

## கிறிஸ்துவை அறிந்த பின் இருக்கின்ற வாழ்க்கை

நம்முடைய தேவன் நம்மேல் வைத்த அன்பினாலே கிறிஸ்துவை இரட்சகராக இந்த உலகத்திற்கு அனுப்பினார் (யோவா. 3:16). கிறிஸ்து நம்மேல் வைத்த அன்பினாலே தம்மை தாமே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, இரத்தத்தை சிந்தி, "நமக்கு மீட்பை உண்டு பண்ணியிருக்கிறார் ". (1 யோ 3:16) வாலிபர்களாகிய நாம் அதை நன்றாக உணர்ந்து அறிந்து இருக்கிறோம். நாம் மீட்பை பெறுவதற்கு கிறிஸ்து இரத்தம் சிந்தினார். சிலுவையை சுமந்தார், சிலுவையில் அறையப்பட்டார் என்று பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கிறோம். அவர் மிகப் பெரிய தியாகத்தை செய்து இருக்கிறார். "எனக்காக என் மீட்பர் இரத்தம் சிந்தி இருக்கிறார். அவருக்காக நான் என்ன செய்யப் போகிறேன்" என்று ஒவ்வொரு வாலிப உள்ளங்களுக்கும் இந்த கேள்வி எழ வேண்டும். சங்கீதக்காரனாகிய தாவீதை தேவன் அநேக உபத்திரவங்களுக்கும் இக்கட்டுகளுக்கும் விலக்கி காத்தார்.

அவன் தன்னுடைய சங்கீத புத்தகத்தில் இப்படியாக ஒரு கேள்வியை எழுப்புகிறான். “கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன் என்று கேட்கிறான்” (சங். 117:12) ஒருவேளை, நாம் பெரிய செல்வந்தராக இருந்தால் தேவனுக்கு பணத்தையோ அல்லது பொருளையோ செலுத்த முடியுமா? நிச்சயமாக முடியாது. ஏனெனில், “பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது” என்று வேதாகமம் விளம்புகிறது. பின்பு நான் கர்த்தருக்கு என்னத்தை செலுத்து வேன். சங்கீதக்காரனே அதற்கான பதிலையும் அடுத்த வசனத்தில் எழுதுகிறார். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுவேன் (சங். 116:13) என்று கூறுகிறார். கிறிஸ்து நமக்காக செய்த தியாகத் திற்கு நாம் இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு அநேக ஆத்து மாக்களை ஆதாயம் செய்வோம். நான் மாத்திரம் பரலோகம் போனால் போதும் என்று எண்ணாமல், என்னுடைய தாய், தகப்பன், சகோதரன், சகோதரி, நண்பர்கள், உறவினர்கள் என்று எல்லாரும் பரலோகம் போக வேண்டும் என்று வாலிபர் களாகிய நீங்கள் சிந்தித்து செயல் படுங்கள். கிறிஸ்துவின் பிரதான கட்டளை அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர் களை நோக்கி; வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ஆகையால், நீங்கள் புறப்பட் டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுட னே கூட இருக்கிறேன் என்றுள்ளது. (மத்தேயு 28:18- 20) இந்த வசனத்தை ஏற்று அநேகரை கிறிஸ்துவுக்கு சீஷராக்குவோம், அநேகரை கிறிஸ்துவுக்குள் அழைத்து வருவோம்.

அதோடு மாத்திரம் அல்ல, கிறிஸ்துவின் சபைக்கும், சத்தி யத்திற்கும் தூணும் ஆதாரமுமாய் விளங்குவோம். தேவனுடைய கிருபை உங்களோடு சதாகலங்களிலும் இருந்து வழி நடத்து வதாக. ஆமென்.

## நாளும், நடப்பும்

1. கொள்கை முடிவுகளில் நீதிமன்றம் தலையிடக்கூடாது என்று பிரதமர் கருத்து.
2. காஷ்மீர் நிலவரம் இந்திய அரசுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.
3. பன்றிக் காய்ச்சல் மீண்டும் தலை தூக்கியுள்ளது.
4. தமிழில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு முன்னுரிமை தமிழக அரசு அறிவிப்பு.
5. காமன்வெல்த் போட்டிகளுக்கு டெல்லியில் நிலவும் பருவநிலை சவாலாக இருந்து வருகிறது.
6. பீகார் மாநில சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட ராகுல் காந்தி முடிவு.
7. விலைகளைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கிக்கு பிரணாப் ஆணை.

சிறுவர் பகுதி

# கல்லறையிலிருந்து இயேசு எழுந்தார்

எனதருமை தம்பி, தங்கைகளே! உங்களை இப்பகுதியின் மூலம் சந்திப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இயேசு ஆண்டவர் இப்பூமியில் வாழ்ந்த போது உங்களை மிகவும் நேசித்தார், அதுமாத்திரமல்ல தேவனுடைய ராஜ்ஜியத்தில் ஒருவன் பிரவேசிக்க அவன் உங்களைப் போல மாறவேண்டும் என்றும் அவர் கூறினார். இம்மாதம் அவரைப் பற்றி சில காரியங்களை கற்றுக் கொள்ளுவோம், வாருங்கள்.


உங்களிடம் ஒருவர் வந்து, தன் நண்பன் மரித்து, மூன்று நாட்களுக்கு பிறகு உயிரோடு எழுந்தான் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்? எதையோ உளருகிறான் என்று கூறி விட்டு விடுவீர்கள். இதேபோல் உங்களிடம் வந்து இயேசு கிறிஸ்து மரித்தார். ஆனால், மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்? அதை நீங்கள் நம்ப வேண்டும். ஏனென்றால், வேதம் கூறும் எல்லா சம்பவங்களுக்கும் ஆதாரங்கள் உள்ளன. அதேபோல, உயிர்த்தெழுந்த சம்பவத்திற்கும் ஆதாரங்கள் உள்ளன. சரி, அவை என்ன என்று பார்ப்போமா?

**(i) ஏனென்றால் வேதம் அப்படித்தான் கூறுகிறது**

நாம் உயிர்த்தெழுதலை விசுவாசிக்க ஒரு சிறந்த காரணம் இதுதான். ஏனென்றால், வேதம் இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என கூறுகிறது. உங்களுக்கு ஒன்று தெரியுமா? எழுதப்பட்ட புத்தகங்களிலேயே மிகவும் சரியாக, பிழையின்றி, துல்லியமாக எழுதப்பட்டது வேதாகமம் தான்! அநேகம் பேர் வேதம் தவறு என்று நிரூபிக்க முயன்றும் முடியாமல் அவர்களின் முயற்சி படு தோல்வியில் முடிந்துவிட்டது. வேதம் கூறும் மற்ற காரியங்கள் உண்மைதான் என்றால் இதுவும் உண்மையாகத்தானே இருக்க முடியும்.

**(ii) தீர்க்கதரிசிகளினால் உயிர்த்தெழுதல் காரியம் முன்னுரைக்கப்பட்டது**

இயேசு பிறப்பதற்கு சுமார் 1000 ஆண்டு முன்பு வாழ்ந்த தாவீது ராஜா கூறும்பொழுது, கிறிஸ்து மரித்து உயிரோடு எழுவார் என்று கூறியிருக்கிறார். சங். 16:10ல் என் ஆத்துமாவை பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தவான்களை அழிவைக் காணவொட்டீர் என கூறியிருக்கிறார். இதை பேதுரு, அப். 2:28ல் மேற்கோள் காட்டியிருக்கிறார். எனவே, இதுவும் ஒரு ஆதாரமாயிருக்கிறது.



இதே போன்ற குகை கல்லறையில் இருந்து தான் மூன்றாம் நாளில் இயேசு உயிர்த்தெழுந்தார்

**(iii) பயம் மாறி விசுவாசம்**

இயேசு கைது செய்யப் பட்ட அந்த இராத்திரி சீஷர்க ளுக்கு ஒரு சோகமான நேரமாக இருந்திருக்கும். பயத்தினால் அனைவரும் ஓடி விட்டார்கள். தைரியமான பேதுருவும் இயேசு வை மூன்று முறை மறுதலித்தான். ஆனால், அடுத்த சில வாரங்க ளில், இயேசு உயிரோடு எழுந் தார் என அப்போஸ்தலர்கள் பிரசங்கித்தார்கள். துன்புறுத்து தலோ சிறையோ, பயமுறுத்தலோ அவர்களை அப்பணியிலிருந்து தடுக்கவில்லை. எந்த சூழ்நிலை யிலும் பிரசங்கித்தார்கள் (அப். 4:18-20)

இயேசு உயிர்த்தெழுந்தது, பயந்திருந்தவர்களை வல்லமை யுள்ள பிரசங்கிமார்களாய் மாற்றி யிருக்கிறது. பேதுரு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம் என்கி றார் (அப். 2:32).

இயேசு உயிரோடு எழுந்தார் என்பது நமக்கு மரணத்தைப் பற்றிய பயத்தை நீக்குகிறது. உண்மையாய் வாழ்கிற யாரும் இயேசு வைப் போலவே மரணத்தை ஜெயிக்க முடியும். இயேசுவை உயிரோடு எழுப்பி அந்த நம்பிக்கையை நமக்கும் தந்த தேவ னுக்கும் நன்றியாய் ஜீவிக்க வேண்டும். அப்படியே ஜீவிக்க தேவன் சிறு பிள்ளைகளாகிய நமக்கு உதவுவாராக ஆமென்.

**R.A.R. NAYAGAM**

**யாக்கோபு நிருபத்தில் பூரணமானவைகள்**

1. *பூரணமான பொறுமையின் கிரியை 1:4*
2. *பூரண தேவ ஞானம் 1:5*
3. *பூரண பாவம் 1:15*
4. *பூரணமான பரத்தின் வரம் 1:17*
5. *பூரண சுயாதீனப் பிரமாணம் 1:25*
6. *பூரணப்பட்ட விசுவாசம் 2:22*

# பாவமில்லாத வாழ்வு சாத்தியமா?

நாம் எல்லோரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களானோம்; நீதிமான் ஒருவனாகிலும் இல்லை! ஒரு பாவமும் செய்யாத நீதிமான் ஒருவனும் இல்லை!! இதைப் போன்ற வசனங்களை மேற்கோள் காட்டி பாவமில்லாமல் வாழும் வாழ்க்கை சாத்தியமற்றது என்பதைப் போன்ற ஒரு பிரமை கிறிஸ்தவர்கள் மத்தியில் ரகசியமாக உலாவந்து கொண்டிருக்கின்றது! ஆனால், மேற்சொன்ன வசனங்கள் வேதத்தில் தேவனை அறியாத, ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாத ஜனங்களைப் பற்றி குறிப்பிடும் வசனங்களாகும். யோபு, ஆபிரகாம், நோவா இவர்களை நீதிமான்கள் என்று தான் வேதம் குறிப்பிடுகிறது மற்றும் ஆபேல் (எபி. 11:4) லோத்து (II பேது. 2:8) போன்றவர்களையும் நீதிமான்கள் என்றுதான் வேதம் சொல்லியிருக்கிறது!.

வேதம் எழுதப்பட்டதின் நோக்கமாக மூன்று காரியங்களை பொதுவாகக் குறிப்பிடுவார்கள். 1) இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து நித்திய ஜீவனைப் பெற 2) கற்றுக் கொள்ள வேண்டிய போதனைகளைக் கற்றுக்கொள்ள (ரோமர் 15:4) 3) அவர்களின் தண்டனையை பார்த்து நாம் எச்சரிப்படைய (1கொரி. 10:11) ஆனால், நான்காவதாக ஒன்றையும் இந்த பட்டியலில் நாம் சேர்க்கலாம். அது “ நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன் ” என்பது. (1யோவா 2:1) ஆண்டவர் இயேசுவை ஏற்றுக்கொண்டு சபை வாழ்க்கை வாழும் மக்கள் பாவமில்லாதவர்களாக வாழவே அழைக்கப்பட்டுள்ளனர் (1தெச. 4:3-8).

சபையிலிருக்கும் மக்கள் இரட்சிக்கப்பட்டவர்கள். அதாவது, பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டவர்கள் என்று புதிய ஏற்பாடு தெளிவாக எடுத்துச் சொல்லுகிறது (கொலே 1:13). இருளின் அதிகாரத்தினின்று மற்றும் ரோமர் 6:7 ஞானஸ்நானம் பெற்றவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறான். இப்படி விடுதலையான வாழ்வை அனுபவிக்க வேண்டிய கிறிஸ்தவர்கள் ஏன் பாவஞ்செய்கிறார்கள்? மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் பலவற்றிற்கு பாவமே மூலக்காரணமாக உள்ளது.

மனிதன் எப்படி பாவத்திற்கு ஆளாகின்றான். அதிலிருந்து விடுதலையான வாழ்வை அவன் எப்படி வாழ முடியும்? என்கிற காரியத்தை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்! யாக்கோபு 1:14-16 வசனங்களின்படி ஒருவன் பாவஞ் செய்வதற்கு மற்ற யாரும் காரணமல்ல; அவனவன் தன்தன் சுய இச்சையினால் இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான்; நீதிமொழிகள்: புத்தியீன வாலிபன் பற்றி நாம் காணும் போது தன்

வழிகளை அவளுக்கு தூரப்படுத்தாமல் அவள் இருக்கும் தெருவுக்கு சென்று சிக்கி சீரழிவதைப் பற்றி வாசிக்கின்றோம். பாவத்தின் துவக்கம் பெரும்பாலும் *பார்வையிலேயே ஆரம்பமாகிறது* (நீதி. 23:31,32) அதையே ஆண்டவர் இன்னும் நேரடியாக ஒரு ஸ்திரீயை *இச்சையோடே* “ *பார்க்கிறவன்* ” அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று என்று எச்சரிக்கின்றார். ஆனால், இவ்வுலக ஞானம் பார்ப்பதெல்லாம் தப்பில்லை என்று போதனை செய்கிறது. மத். 6:22,23ன் படி, நம் கண்கள் கெட்டதாயிராமல் தெளிவாய் இருக்க வேண்டும் என்று ஆண்டவர் உரைக்கிறதைப் பார்க்கிறோம். பார்வையினால் உண்டாகும் தவறான எண்ணங்களே வளர்ச்சியடைந்து பாவத்தை பெற்று எடுக்கிறது. எண்ணங்கள் பேச்சுகளாக வெளிப்படுகிறது. பின்பு, அது பாவத்தை செய்யும் படியாகத் தூண்டுகிறது. விஞ்ஞான வளர்ச்சியடைந்த இக்கால கட்டங்களில் செல்போன், SMS மூலமாகக் கூட தங்கள் பாவ எண்ணங்களை ஜனங்கள் வளர்த்துக் கொள்கிறார்கள். சில அதி மோதவிகள் கடவுள் பெண்ணைப் படைத்து மனிதனுக்கு கண்களைக் கொடுத்துள்ளது ரசிப்பதற்காகத்தான் என்று சொல்லிக் கொள்வார்கள். ஆனால், 1யோவான் 2:16ன் படி, மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகிய யாவும் பிதாவினால் அல்ல. பிசாசின் பிடியிலிருக்கும் இவ்வுலகத்தினால் உண்டானது. *பாவம் பூரணம்* ஆகும் போது *மரணத்தைப்* பிறப்பிக்கும் என்று யாக்கோபு எழுதியிருக்கின்றார்! பவுல் அப்போஸ்தலன் கூட “ *பாவத்தின் சம்பளம் மரணம்* ” என்று எழுதியிருப்பதை நாம் அறிவோம். 2தீமோத் 2:22-ல் வாலிபர் இச்சைகளுக்கு விலகியிருக்க வேண்டும் என்று சொல்வதும் இதற்காகத்தான். சரி நாம் பாவங்களுக்கு விலகியிருக்க வேதத்தின் இரண்டு மாபெரும் சத்தியங்களைக் காண்போம்.

ஒருவன் பாவத்தினால் ஏற்படும் விளைவுகளை சரியாக புரிந்து கொள்ளும் போது அவன் பாவங்களுக்கு விலகி ஓட அது ஏதுவாகும். இன்றைய சமுதாயம் கெட்டு சீரழிந்து கிடப்பதற்கு காரணமே மனித குலத்தின் பாவமாகும். குடும்பங்கள், வாலிபப் பிள்ளைகள் சமாதானமின்றி காணப்படுவதற்கும் பாவமே காரணமாகும். அதன் தீமையான விளைவுகளை ஒருவன் புரிந்து கொள்ள ஓர் நல்ல உதாரணம் தாவீதின் வாழ்க்கையாகும். தேவன் அவனை மன்னித்த போதும் பாவத்தினால் அவன் அடைந்த பாதிப்புகள் ஏராளமாகும். பத்சேபாளிடத்தில் பார்வையில் ஆரம்பித்த அவன் பாவம், குற்றமில்லாத உரியாவின் ரத்தம் சிந்தக் காரணமாகிறது. அவனுடைய பிள்ளை வியாதிபட்டு மரணமடைந்ததினால் தாவீது மிகுந்த வேதனைக்குள்ளானான். தன் மகள் தாமாரின் வாழ்க்கை அம்னோன் என்பவனால் சீரழிக்கப்பட்டது. மேலும், அவன் பிள்ளைகள் அம்னோன், அப்சலோம் என்று ஒருவர் பின் ஒருவராக அகால மரணமடைந்து துக்கத்தை

ஏற்படுத்தியபோது நிலைகுலைந்து போனான். இவ்வளவுக்கு பிறகும் அவன் மரிக்கும் தருவாயிலும் தன் மகன் சாலமோன் செய்த அவ லட்சணமான காரியத்தால் சஞ்சலத்தோடே மரிக்க நேரிட்டது. இந்தக் காரியங்களெல்லாம் தாவீதின் வாழ்வில் நடக்க முக்கிய காரணம் அவன் செய்த பாவத்திற்கான சம்பளமே. ஆகவே, பாவத்தின் விளைவுகள் நிச்சயம் உண்டு (நீதி. 6:27-29) என்பதை அறிந்து ஒருவன் பாவத்திற்கு விலகியிருக்க வேண்டும்.

ஒருவன் பாவத்தில் அகப்படும்போது அவனுக்கு உதவி செய்ய ஒருவர் உண்டு என்பதே இரண்டாம் சத்தியமாகும். எபிரெயர் 4:15ன் படி நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடிய, நம்மைபோல சோதிக்கப்பட்டும் பாவமில்லாத பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கின்றார். பாவமான எண்ணங்கள் ஒருவேளை நம் சிந்தனைகளைக் கடந்து போகலாம். ஆனால், நாம் பாவம் செய்யாமல் வாழ ஆண்டவர் இயேசுவின் உதவியும், உபதேசமும் நமக்கு உண்டு. ஆண்டவர் இயேசு மாம்சத்தில் வந்ததால் அப்படிப்பட்ட சோதனைகளை மேற்கொள்ளும் உபாயத்தை நமக்குக் கற்றுத் தருகிறார். அவைகளில் ஒன்று நீங்கள் சோத னைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபியுங்கள். மாம்சம் பெலவீனமாயிருந்தாலும் ஜெபித்தால் ஜெயம் பெறலாம் (மத். 26:41). தினந்தோறும் அதற்காக ஜெபிக்க வேண்டும் (மத். 11:13) அப்படி நாம் அவர் சொன்னபடி ஜெபித்தால் நிச்சயம் வெற்றி உண்டு (I யோவா 5:4) நாம் அப்படி ஒரு வெற்றியுள்ள, பாவத்திற்கு விலகியிருக்கும் வாழ்க்கை வாழவே தேவன் பாவம் அறியாத இயேசுவை நமக்காக பாவமாக்கினார் (IIகொரி. 5:21) தேவனிடத்தில் நேசக்குமாரனாக ஐசுவரியமுள்ளவராக ஆண்டவர் இயேசு இருந்தாலும் நாம் விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகும்படிக்கு நமது நிமித்தம் அவர் தரித்திரர் ஆனார் (IIகொரி. 8:9). ஆக, தேவன் பரிசுத்தமுள்ளவர். ஆகையால், நாமும் பரிசுத்தராயிருக்க வேண்டும் (I பேது 1:15) என்று தேவன் எதிர்பார்க்கின்றார். இதற்காகவே ஞானஸ்நானத்தில் தேவன் நமக்கு பரிசுத்த ஆவியை கொடுத்துள்ளார் (அப். 2:38, I தெச. 4:7,8) ஆகவே, தேவனு டைய பிள்ளைகளாக பாவங்களுக்கு விலகி பரிசுத்த வாழ்வை நாம் வாழவே தேவன் இரட்டிப்பான ஆவிக்குரிய ஆசீர்வாத உதவிகளை வைத்துள்ளார். 1. பரிசுத்த ஆவியானவர் 2. ஆண்டவர் இயேசுவானவர் ரோமர் 8:26,34 ஆகவே எனக்கு பிரியமானவர்களே, நம் பாவங்களை அறிக்கையிட்டு, விட்டொழித்து ஒளியில் நடப்பவர்களாக வாழ்ந்து தேவ சித்தத்தை நிறைவேற்றுவோம் (I யோவா 1:7-10; 2:1) நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமென்!

**K. பாண்டியன்**

# ஆவிக்குரிய வாழ்விற்கான அளவுகோலை ஏற்படுத்துகிறது யார் ?

ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு பயணம் செய்வது எனக்கு மிகவும் விருப்பம். ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு, ஒரு பட்டணத்திலிருந்து மற்றொரு பட்டணத்திற்கு போகும் போது அங்கே, சட்டங்கள், பழக்கவழக்கங்கள், கலாச்சாரங்கள் போன்றவற்றில் மாற்றங்கள் இருக்கும் என்பது எனக்குத் தெரியும். நான் ஒரு அமெரிக்க பிரஜையாக இருந்தாலும் நான் செல்லும் தேசங்களிலுள்ள சட்டங்கள் என்னைக் கட்டுப்படுத்தும் என்கிற உண்மையை நான் அறிந்திருக்கிறேன். ஒவ்வொரு நாட்டிலுள்ள சட்டங்கள் எல்லாவற்றையும் குறிப்பாக அறிந்து கொள்வது எனக்கும் அல்லது வேறுயாருக்கும் முடியாத காரியம். இது உண்மையாக இருக்கிறபடியால், இது கீழ்க்காணும் கேள்விகளை எழுப்புகிறது.

1. இந்த தேசங்களின் சட்டங்களை நான் முழுமையாக அறியவில்லை என்றாலும் அந்த சட்டங்களுக்கு நான் பொறுப்பாளியா? ஆம்
2. அந்தச் சட்டங்களை கற்றுக்கொள்வதற்கு எனக்கு நேரம் இல்லை என்றாலோ அல்லது அவைகளை கற்றுக்கொள்ள மறுத்தாலோ அதற்கு நான் பொறுப்பாளியா? ஆம்.
3. என்னுடைய அபிப்பிராயங்கள், உணர்வுகள் அல்லது என் தேசத்தின் கலாச்சாரமோ, அந்தச் சட்டங்களை மாற்ற முடியுமா அல்லது எனக்கேற்ப அந்தச்சட்டங்கள் மாற்றப்படுமா? மாற்றப்படாது.
4. இந்த தேசங்களுக்குள் நான் சட்டத்தை மீறினால், என் அறியாமைக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமா? இல்லை

நம்மால் இனியும் கூடுதலான கேள்விகளை கேட்க முடியும், ஆனால், நம்மெல்லாருக்கும் நான் சொல்கின்ற கருத்து புரியும் என நினைக்கிறேன். இந்த தேசங்கள், அது எந்த தேசமாக இருந்தாலும் சரி, அந்த தேசத்திற்குள் இருக்கும் எல்லோரும் கீழ்ப்படிய வேண்டும் என ஒரு தரத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. எல்லா மக்களும், அவர்கள் அந்த நாட்டு குடிமக்களாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அந்த குறிப்பிட்ட ஒரு நாட்டிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற தரத்திற்கு பொறுப்பாளிகளாயிருக்கிறார்கள்.

இது தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவிலும் வெளிப்படையாகவே உண்மையயிருக்கிறது. தேவன் ஒரு அளவுகோலை ஏற்படுத்தியிருக்கிறார். அதை தேவ ஆவியினால் ஏவப்பட்ட வேதாகமத்தில் நாம் கண்டுகொள்ள முடியும். ஒவ்வொருவரும் தேவன் ஏற்படுத்தியிருக்கிற அளவுகோலுக்கு பொறுப்பாளியாக இருக்கிறார்கள். அவர்கள் அதை அறிந்தாலும் சரி, அறியாவிட்டாலும் சரி, அது அவர்கள் அதை கற்றுக் கொள்ள நேரத்தை ஒதுக்கினாலும் சரி, ஒதுக்காவிட்டாலும் சரி எல்லோரும் தேவனுடைய அளவுகோலுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும். என்னுடைய அபிப்பிராயங்கள், உணர்வுகள், அல்லது கலாச்சாரம் தேவனுடைய அளவுகோலை மாற்றாது. அதேப்போல எனக்கேற்றவாறு தேவன் தம்முடைய அளவுகோலை மாற்ற மாட்டார். தேவன் பாவமில்லாத தம்முடைய ஒரே பேறான குமாரனை காப்பாற்றும்படியாக தம்முடைய திட்டத்தை மாற்ற வில்லை என்றால், உங்களையும் என்னையும் காப்பாற்றும் படியாக தம்முடைய திட்டத்தை மாற்றமாட்டார் என்பதை நினைத்துப்பாருங்கள் (எபிரெயர் 5:7-9). அறியாமை ஒரு விதிவிலக்காக சாக்காக அமையாது (அப். 17:30). இது உண்மை யென்று நாம் அறிந்திருக்கிறபடியால், மற்றவர்கள் ஆயத்தமாகும் படி நாம் அவர்களுக்குச் சொல்ல இது நம்மை ஏவ வேண்டும் (II கொரி 5:10-11).

நம் தேவனுடைய திட்டம் அவருடைய முடிவில்லாத ஞானத்தையும், அன்பையும் நிரூபிக்கிறது. நமக்கு போராட்டங் கள் உண்டாகும் என்பதை தேவன் அறிந்திருந்தபடியால் தான் தம் குமாரனுடைய மரணத்தின் மூலமாக மனித இனத்திற்கு அவர் மன்னிப்பை ஏற்படுத்தியிருக்கிறார். நாம் எப்படி வாழவேண்டும் என மிகச் சிறந்த மாதிரியை இயேசு நமக்கு வைத்துவிட்டு, மனித இனம் தேவனோடு ஒப்புரவாகுவதற்கு ஒரு வழியை உண்டாக்கு வதற்காக அவர் மரித்தார். இயேசு நம் ராஜாவாக இருக்கிறபடி யால் அந்த அதிகார அளவுகோலுக்கு நாம் தாழ்மையாகக் கீழ்ப் படிவதே நமக்கு ஒரே வழி.

பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக நம் விசுவாசத்தைக்கொண்டு கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெறும்போது, தேவன் நம்மை மன்னித்து கிறிஸ்து எந்த சபை யைக் கட்டும்படி வந்தாரோ அந்த சபையிலே நம்மைச் சேர்த்துக் கொள்வார் என்கின்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. கொலோ 2:12; மத்தேயு 16:18; அப். 2:38-47; 20:28.

நம் வாழ்க்கையில் சோதனைகள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் நமக்கு உதவிட ஆறுதலையும், பெலத்தையும் நாம் இங்கே கண்டுகொள்ள முடியும்.

***Bob*** ***Benny***

# நான் ஏன் தேவனை விசுவாசிக்கிறேன்

நடைமுறையில் அநேக ஜனங்கள் தேவனை விசுவாசிக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை தேவன் இருக்கிறார் என்பது அவர்கள் இருப்பதைப் போலவே வெளிப்படையான ஒன்றாக இருக்கிறது. தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான் என்று வேதாகமம் சொல்கிறது (சங்கீதம் 53:1). ஒருவர் தேவனை விசுவாசிக்க கட்டாயமான காரணங்கள் இருக்கின்றனவா? தேவன் இல்லையென்று எண்ணிக் கொள்வது உண்மையாகவே நியாயமான ஒன்றாக இருக்கிறதா?

முதலாவது, நாம் தேவனைப் பற்றி பேசும் போது என்ன நினைக்கிறோம்? ஆதியிலே தேவன் வானத்தையும், பூமி யையும் சிருஷ்டித்தார் என்று வேதாகமம் சொல்கிறது (ஆதியாக மம் 1:1). ஆகவே, தேவன் நம் சிருஷ்டிகராயிருக்கிறார். நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர் என்று சங்கீதக் காரன் எழுதுகிறார். தேவன் நித்தியமானவர். அவர் எப்போதுமே இருந்தவர். அவர் எப்போதும் இருப்பார். தேவன் நல்லவர். அவருடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் (சங்கீதம் 111:3). ஆனால், அவர் நம் நியாயாதிபதியும் நமக்கு பிரமாணத்தைத் தந்தவருமாயிருக்கிறார். கர்த்தர் ஞானமுள்ள தேவன்; அவர் செய்கைகள் யதார்த்தமல்லவோ? கர்த்தர் பூமியின் கடையந்தரங்களை நியாயந்தீர்க்கிறவர் (1சாமுவேல் 2:3,10).

கர்த்தர் நம்முடைய நியாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை இரட்சிப்பார் (ஏசாயா 33:22). தேவன் ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24). தேவன் ஒளியாயிருக்கிறார் (1யோவான் 1:5). தேவன் அன்பாகவே இருக்கிறார் (1யோவான் 4:16).

ஆனால், தேவன் என்று அழைக்கப்படுகின்ற சிருஷ்டிகர், நித்தியமானவர், சர்வவல்லவர், நீதியுள்ளவர் இருக்கிறார் என்பதை ஒருவர் ஏன் விசுவாசிக்க வேண்டும்? நாம் வாழ்கின்ற இந்த பிரபஞ்சம், சிருஷ்டிப்பு போன்றவைகள் தேவன் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஏதோ ஒன்று அல்லது யாரோ ஒருவர் எப்போதுமே இருந்து வருவது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இல்லையென்றால் ஒன்றுமே இல்லாத நேரத்தில் ஏதோ ஒன்று (உலகம், மனிதன், மற்றும் இன்று உலகில் இருப்பவைகள் எல்லாம்) ஒன்றுமில்லாமையில் இருந்து தான் வந்திருக்க வேண்டும் என்றாகிவிடும். ஆனால், எந்த மனித

அனுபவமோ மனித விளக்கமோ ஒன்றுமில்லாமையில் இருந்து ஏதோ ஒன்று வந்தது என்று ஒத்துக்கொள்ளாது.

தேவனை விசுவாசிப்பதற்கான இரண்டாவது காரணம், உலகத்திலும், பிரபஞ்சத்திலும் ஒழுங்கு மற்றும் அமைப்பு போன்ற உண்மைதான். ஒழுங்கு இருப்பது மறுக்க முடியாதது. பூமி, சந்திரன், சூரியன் மற்றும் பிரபஞ்சத்திலுள்ள எண்ணற்ற அமைப்புகள் ஆச்சரியமானவைகள். இவைகளின் துல்லியத் தைப் பொறுத்தவரை எந்தக் கடிகாரத்தையும் இதனுடன் ஒப்பிட முடியாது. ஓர் அருமையான கடிகாரத்தின் சிக்கலான பாகங்கள் தானாகவே உருவாகி, தானாகவே ஒழுங்குபடுத்தப்பட்டு, அதை உண்டாக்கினவர் இல்லாமல் அது வேலை செய்வதை கற்பனை செய்து பார்க்க முடியுமா அது போலத்தான் இந்த ஆச்சரியமான பிரபஞ்சம். இயற்கையின் ஆச்சரியமூட்டும் செய்முறைகள், இயற்கை விதிகளின் அற்புத செயல்பாடுகள் போன்றவை ஒரு சிருஷ்டிகர் இல்லாமல் இவைகளெல்லாம் தற்செயலாக ஏற்பட்டு, தானாகவே நீடித்திருந்திருக்கிறதென்பதைக் கற்பனை செய்து பார்க்க முடியாது.

தேவனை விசுவாசிப்பதற்கான மற்றுமொரு காரணம், மனிதனில் இருக்கும் ஒழுக்க ரீதியிலான உணர்வுதான். எதுசரி, எது தவறு என பகுத்தறியும் திறமை கீழான மிருகங்களிடம் இல்லை. இது கலாச்சாரத்தினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், அறிவுள்ளவர்கள், அறிவில்லாதவர்களிடையே வேறுபட்டாலும் இது உலகெங்கும் காணப்படக்கூடிய ஓர் உண்மை தான். சில தனிப் பட்ட நபர்கள் இதற்கு விதிவிலக்காக இருந்தாலும் கூட, எவ்வித சந்தேகமுமின்றி மனிதனுக்குள் ஓர் உலகளாவிய மனச்சாட்சி இருக்கிறது. அது ஒழுக்க ரீதியிலான பிரமாணத்தை கட்டாயப் படுத்துகிறது. அதோடு அந்த பிரமாணத்தைக் கொடுப்பவர் இருக்கிறார் என்று சாட்சி பகர்கிறது.

இந்த உலகம் இருப்பதற்கு இதை உண்டாக்குவதற்கு வல்லமைப் பெற்ற ஏதோ ஒன்று அல்லது யாரோ ஒருவர் அவசி யப்படுகிறார். இவையனைத்தையும் உருவாக்கத்தக்க விவேக முள்ள ஒருவர் அவசியப்படுகிறார். அதைப் போலவே ஒழுங்கு, அமைப்பு, உணர்வு, மனச்சாட்சி போன்றவைகளை நோக்கப் படுத்தி அதை மனிதனுடைய சுபாவத்தின் மீதும், இயற்கையின் மீது விதிப்பதற்கு திறன் பெற்ற ஒருவர் அவசியப்படுகிறார். அவர் தான் தேவன் என்று வேதாகமம் போதிக்கிறது. இதுவரை கற்பனை செய்த அல்லது உருவாக்கப்பட்ட காரண காரியங்க ளைக் காட்டிலும் வேதாகம பதில் தான் அதிக நியாயமானது.

*Roy V. Palmer*

# இயேசு சோதிக்கப்பட்டதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்

இயேசு இந்தப் பூமியிலே வாழ்ந்தபோது பாவம் செய்யும் படியாகச் சோதிக்கப்பட்டது குறித்து சந்தோஷமாக எப்போதாவது உணர்ந்திருக்கிறீர்களா? ஒரு மனிதனாக இயேசு சோதனையை அனுபவித்ததைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். தயவு செய்து என்னைத் தவறாக புரிந்து கொள்ள வேண்டாம். இயேசு பாவம் செய்தார் என்று நான் சொல்லவே இல்லை. இயேசு பாவம் செய்ய வில்லை என்று எபிரெய எழுத்தாளர் சொன்னதை நான் நினைத்துப் பார்க்கிறேன் (எபிரெயர் 4:15). இயேசு பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை என்று பேதுரு சொன்னார் (1பேதுரு 2:22). சோதனை பாவமல்ல என்பதை நான் புரிந்து கொள்கிறேன். இது மனிதனை பாவஞ்செய்ய வைக்கிறது.

மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா இயேசு யோவானால் ஞானஸ் நானம் பண்ணப்பட்ட பிறகு, சாத்தானால் ஆகிய மூன்று நற்செய்தி ஆசிரியர்களும் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார் என்கிற உண்மையை எழுதி வைத்திருக்கின்றனர். ஒருவேளை, நாம் இந்தத் தொடர் சோதனைகளுக்கு மட்டும் தான் இயேசு உட்படுத்தப்பட்டார் என்று சிலவேளைகளில் எண்ணலாம். ஆயினும், லூக்கா "பிசாசான வன் சோதனையெல்லாம் முடித்த பின்பு, சிலகாலம் அவரை விட்டு விலகிப் போனான்" என்று சொல்லியுள்ளார். (லூக்கா 4:13). சாத்தான் இயேசுவை விட்டு சிலகாலம் மட்டுமே விலகிப்போனான். இயேசு வின் எல்லா சோதனைகளுக்கும்அது முடிவாயிருக்கவில்லை. நம் கர்த்தர் எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டாரென்று (எபிரெயர் 4:15) பார்க்கிறோம். எபிரெயர் 2:18, இப்படிச் சொல் கிறது. "ஆதலால், அவர்தாமே சோதிக்கப் பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக் கிறார்". இந்த வசனங்கள் இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனா யிருந்தும் இன்று நாம் சகிப்பது போல சோதனையை சகித்தார் என்று அறிவிக்கின்றன.

சில வேளைகளில் பாவமானது இயேசுவுக்குகூட கவர்ச்சிகரமாக, வசீகரமாக இருந்திருக்கிறது என்று வேதாகமம் சொல்கிறது. பாவம் செய்யாமல் இருக்க இயேசு கஷ்டப்பட்டிருக்கிறார் என்பது நாம் அவர் பேரில் கொண்டிருக்கும் விசுவாசத்தை குறைத்து விடக் கூடாது அல்லது விசுவாசத்தில் ஒரு நிலையற்ற தன்மையை ஏற்படுத்தி விடக் கூடாது. மாறாக, அவர்மீது உள்ள விசுவாசத்தை இது அதிகரிக்க வேண்டும். பாவத்தின் கண்ணியும், கவர்ச்சியும் இருந்த போதிலும் பாவசெய்யாத இரட்சகர் ஒரு இருக்கிறார். அவர் சோதிக்கப்பட முடியாதவர் என்பதற்காக அவர் பாவஞ் செய்யாதிருக்கவில்லை. பாவத்தில் பங்கேற்பதற்கான ஆசையை அவர் வெற்றிகரமாக மேற் கொண்டபடியால் அவர் பாவமில்லாதவராக இருந்தார். அவர் தன்னை பிரியப்படுத்துவதைக் காட்டிலும் தம்முடைய பிதாவை அதிகமாகப் பிரியப்படுத்த விரும்பியிருக்கிறார். அதுதான் முக்கிய மானதாக இருந்திருக்கிறது.

கிறிஸ்தவனாக வாழ்வது எளிது என்று சொல்கிற ஒருவர், நாம் வாழ்கின்ற இந்த உலகத்தில் வாழாமல் வேறொரு உலகத்தில் தான் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும். எப்படி சாத்தான் இயேசுவை

சிக்கவைக்கும்படி சோதனைகளை கொடுத்து தீவிரமாகச் செயல்பட்டானோ, அதுபோல, நாம் எப்போதும் உண்மையாகவே தேவனைப் பிரியப்படுத்தத் தேவையில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறான். இதை நாம் ஆவிக்குரிய மனதையுடைய பவுல் வெளிப்படுத்தியிருக்கிற கவலையினால் நிச்சயமாக அடையாளம் கண்டு கொள்ள முடியும். "அதெப்படியெனில், என்னிடத்தில் அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மை செய்ய வேண்டு மென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மை செய்வதோ என்னிடத்தில்லை. ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன் " (ரோமர் 7:18,19). பவுல் நிச்சயமாக சோதனையோடும், பாவத்தோடும் போராடி, நம்முடைய திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்படும்படி அவர் அனுமதிப்பதில்லை என்கிற அறிவால் அவைகளை வென்றிருக் கிறார். (1கொரிந்தியர் 10:13).

இயேசு சோதிக்கப்பட்டபோது,தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அறிவு அவருக்கு மிகுந்த உதவியாக இருந்தது. பெலவீனமான நேரங்களில் பெலனுக்காக அவர் வேத வாக்கியங்களை சார்ந்திருந்தார். சங்கீதம் 119:11-ல் தாவீதின் குறிப்பிடத்தக்க வார்த்தைகளால் நாம் நினைப்பூட்டப்படுகிறோம்; நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன் என்று. இயேசு தேவனுடைய வார்த்தையை தம்முடைய இருதயத்தில் வைத்து வைத்தி ருக்கிறார்; சாத்தான் அவரைத் தாக்கின போது சத்துருவோடு போராட வசனங்களை ஆயுதங்களாகப் பயன்படுத்தி இருக்கிறார். வசனம் என்ன சொல்கிறது என்பதை மட்டும் அவர் அறிகிறவராகயில்லாமல், அந்த வார்த்தையில் அவருக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது.

இயேசு ஒரு ஜெபிக்கிற மனிதராகவும் காணப்பட்டார். எபிரெயர் 4:16ன் வார்த்தைகளிலிருந்து நாம் ஜெபத்தில் நம்பிக்கையை கொள்ள வேண்டும். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

ஆம், பாவத்தின் வசீகரத்தால் இயேசு பாதிக்கப்பட வில்லை என்பதைக் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இயேசு மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார் (எபிரெயர் 7:25). எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் இது! கிறிஸ்து மூலமாய் நாம் தேவனிடத்தில் ஜெபிக்கும்போது, சோதிக்கப்படுவது என்றால் என்ன என்பதை அறிந்திருக்க இயேசு நமக்காக பிதாவினிடத்தில் மன்றாடுகிறார். அதோடு, சாத்தானால் பாவத்தை கவர்ச்சிகரமாக காட்ட முடியும் அவனுக்கு அந்த திறமை இருக்கிறது என்பதால் இயேசு நமக்காக பிதாவினிடத்தில் மன்றாடுகிறார்.

இயேசு நம்மைப்போன்று சூழ்நிலைகளைக் கடந்ததாலும், மனித வாழ்க்கையை அதன் பிரச்சனைகளோடும், சோதனைகளோடும் கடந்து சென்றிருக்கிறபடியால் நம்முடைய நியாதிபதியாக இயேசு நமக்கு ஆறுதலை அளிப்பார். அவர் என் நியாதிபதியாக இருக்கப் போகிறபடியால், இயேசு சோதிக்கப்பட்டதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

***Byron Nichols***

## "கிருபையுள்ள வார்த்தை" தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : சகோ. **பிலேமோன் ராஜா**, மதுரை.

| | | | |
|---|---|---|---|
| Z தமிழ் | TV | வெள்ளி | காலை 5:30 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | காலை 7:45 மணி |

## "கிறிஸ்துவின் வசனம்" தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : சகோ. **அர்ச்சுணன்**, வத்தலக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| இமயம் | TV | புதன் | காலை 6:30 மணி |



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Thursday Sunday | 6.45 - 7.00 a.m. | Box. 3815 New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sundays, Mondays, Tuesdays, Thursdays, | 2.00 - 2.15 p.m. | Box. 80 Kakinada - 533 001 | Joshua Gootam |
| TAMIL | Mondays, Tuesdays, Thursdays, Fridays, | 5.30 - 5.45 p.m. | Box. 8405 Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Fridays | 3.45 - 4.00 p.m. | Box. 5540 Thiruvananthapuram - 695 034. | P.K. Varghese |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| இமயம் | TV | வியாழன் | காலை | 6:00 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |


## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன் பெறலாம்.

இயக்குனர்

### அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.